# ரஷ்யாவுக்கு இலங்கை சப்பாத்துக்கள்

Registered as a Newspaper in Ceylon ★ ★ ★ விலை சதம் 10

ஈழநாடு

THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily

மலர் 8 (10-10-66) இதழ் 241

பராபவ புரட்டாதி 24 ஜ. ஆகிர் 24 திங்கட்கிழமை

மின்னும் வைரங்களுக்கும்
தங்கப்பவுண் நகைகளுக்கும்
AKS
போன்: 519
நகை மாளிகை
கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

## உற்பத்தியாளருக்கு யோகம்

கொழும்பு, ஞாயிறு
இலங்கையில் உற்பத்தியாகும் சப்பாத்துகள் எல்லாவற்றையும் வாங்கிக்கொள்ள சோவியத் யூனியன் முன்வந்திருக்கின்றது.

இலங்கையில் உற்பத்தியாகும் சப்பாத்துகள் தரத்தில் உயர்ந்தவையாக இருப்பதாகவும் வெகுகாலம் நீடிக்கக் கூடியவையாக இருப்பதாகவும் ரஷ்யாவில் கருதப்படுவதே, இப்போது பெருவாரியாக சப்பாத்துக்களை ரஷ்யா வாங்குவதற்குமுன் வந்ததற்குக் காரணம் என்று தெரிய வருகின்றது.

(5-ம் பக்கம் பார்க்க)

பல்கலைக் கழகங்களில்

# 1621 பெண்களுக்கு இவ்வருடம் அனுமதி

## கல்வி தேசிய சபை நடவடிக்கை

கொழும்பு, ஞாயிறு
வித்தியோதய வித்தியாலங்கார பல்கலைக் கழகங்களுக்கு இவ்வருடம் 700 மாணவிகள் அனுமதிக்கப்படவேண்டும் என்று உயர் கல்வி தேசியசபை முடிவு செய்திருக்கின்றது.

இலங்கை பல்கலைக் கழகத்துக்கு 921 பேர் அனுமதிக்கப் படுவார்கள்.

மொத்தமாக இவ்வருடம் பல்கலைக்கழகங்களுக்கு 1621 மாணவிகள் அனுமதிக்கப்படவிருக்கிருர்கள்.

வித்தியோதய வித்தியாலங்கார பல்கலைக் கழகங்களுக்கு பெண்கள் அனுமதிக்கப்படக் கூடாதென்றும் பிக்குகளுக்கென்று தனியாக பல்கலைக்கழகங்கள் உருவான பிறகு அவர்களுக்கு அனுமதியளிப்பதில் தவறில்லையென்றும் சமீபத்தில் பௌத்த ஆராக்ஷய என்ற ஸ்தாபனம் ஆட்சேபம் தெரிவித்திருந்தது.

''வித்தியோதய வித்தியாலங்கார பல்கலைக் கழகங்களுக்கு பெண்கள் அனுமதிக்கப்படுவது மிகவும் அவசியம். அப்படி அனுமதிக்கப்படாவிட்டால், அவர்களுக்கு மேற்கல்வி பெறும் வாய்ப்பை இல்லாதுசெய்வதாக முடியும். இலங்கை பல்கலைக்கழகத்தில் பிக்குகளும் பெண் மாணவிகளும் பலகாலமாக கல்விபயின்றே வருகிருர்கள்''

இவ்வாறு தேசிய உயர் கல்விச் சபைதலைவர் டாக்டர் மலலசேகரா கருத்து வெளியிட்டிருக்கின்ருர்.

## கொழும்பில் மீண்டும் வெள்ள அபாயம்

### கனத்த மழை பெய்கிறது

கொழும்பு, ஞாயிறு
கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் மீண்டும் பெருவெள்ளம் ஏற்படக்கூடிய அபாயம் உருவாகியுள்ளது.

நேற்றுமுதல் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கனத்தமழை தொடர்ந்து பெய்துகொண்டிருக்கின்றது. இன்று பிற்பகல் மூன்று மணிவரை மழை ஓயாமல் பெய்துகொண்டிருந்தது. இப்படி தொடர்ந்து மழை பெய்யுமானால் கொழும்பில் பெருத்த நஷ்டம் ஏற்படலாம் என்று அஞ்சப்படுகின்றது.

மழைநீர் வற்றிவந்த தாழ்ந்த பகுதிகள் எல்லாம் மீண்டும் நீர் நிறைந்துவழிகின்றது.

நீர்வற்றியதால் வீடுகளுக்குத் திரும்பிய வெள்ள அகதிகள் எல்லாம் மீண்டும் சாமான் தட்டு முட்டுகளைக் காவிக்கொண்டு பாதுகாப்பான இடங்களுக்கு போகிருர்கள்.

## லஞ்ச வழக்கில் பெண் விடுதலை

கொழும்பு, ஞாயிறு
கைலஞ்சம் வழக்கொன்றில் முதற் தடவையாக குற்றம் சுமத்தப்பட்ட ஒரு பெண் இன்று விடுதலை செய்யப்பட்டார்.

கொழும்பில் நடைபெற்ற கைத்தொழில் பொருட்காட்சியின் போது மின்சார அலங்காரங்களுக்கான ஒப்பந்தத்தைப் பெற்றுத் தருவதாக ஒரு மின்சார கம்பெனியிடம் லஞ்சம் கோரியிருந்ததாக திருமதி பராசக்தி டூல்வெல என்பவர் மீது குற்றம் சாட்டி இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது.

ஒப்பந்தப் பணத்தில் தமக்கு பதினைந்து சதவிகிதம் லஞ்சம் கோரியதாகவும் இவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இவ்வழக்கு இன்று நீதிபதி கோபன் ஜயவர்த்தனு முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபொழுது ஐவன் கமனகே என்பவர் சாட்சியமளித்தார். எதிர்தரப்பு வழக்கறிஞர் திரு. எஸ். நடேசன் சாட்சியை குறுக்கு விசாரணை செய்தபொழுது சாட்சி முரணை முறையில் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து நீதிபதி குறுக்கிட்டு எதிரியை விடுதலை செய்வதாக உத்தரவிட்டார்.

எதிரி தரப்பில் திரு. எஸ். நடேசன், திரு. மாணிக்கசிங்கம், திரு. சி. பத்மநாதன் ஆகியோரின் உதவியுடன் ஆஜரானுர்.

## புதியதமிழ்ப்படங்கள் இறக்குமதி இல்லை

### செலாவணி தகராறு காரணம்

கொழும்பு, ஞாயிறு
கடந்த மூன்றரை மாதங்களாக இந்தியாவிலிருந்து புதிய தமிழ் இந்திசினிமாப் படங்கள் இறக்குமதி செய்யப்படவில்லை. இந்திய ரூபாய் மதிப்புக்குறைப்பின் காரணமாக ஏற்பட்ட செலாவணிக் கட்டுப்பாடுகளே இந்தப்படங்கள் இறக்குமதியாகாததற்குக் காரணம் என்று கருதப்படுகின்றது.

புதிய படங்கள் வராததால் பழைய படங்களையே தொடர்ந்து காட்டப்பட வேண்டியிருக்கும்என்று சினிமாதியேட்டர்சொந்தக்காரர்கள் கூறுகின்றனர்,

## விலை உயர்வுககு கண்டனம்

மாவிட்டபுரம், ஞாயிறு
விதை உருளைக்கிழங்கின் விலை திடீர்உயர்வுக்குக்கண்டனம்தெரிவித்து இனுவிலிலுள்ள ஒரு விவசாயக் கழகம் மகஜர் ஒன்று அனுப்பி உள்ளது.

வடபகுதியில் முதன் முதலாக உருளைக்கிழங்கு செய்கையை இந்தஒரு விவசாயக்கழகமே ஆரம்பித்தது. வடபகுதியில் பெருமளவில் உற்பத்திசெய்யும் இனுவில் விவசாயிகள் உருளைக்கிழங்கு திடீரென விலை உயர்த்தப்பட்டு இருப்பதனால் பெரும் அச்சம்அடைந்து இருக்கிருர்கள். எனவே விலையைக் குறைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு உணவுமந்திரி [illegible] றது.

## முதற்தடவையாக 20 தமிழ் இளைஞர்கள் தெரிவு

கொழும்பு, ஞாயிறு
வெரஹராவிலுள்ள இ. போ. ச. ஜெர்மன் பயிற்சி பாடசாலைக்கு வடக்கு, கிழக்கு மாகாணத்திலிருந்து முதற் தடவையாக இருபது தமிழ் இளைஞர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பயிற்சிப் பாடசாலையில் இயந்திர நுட்பங்கள் குறித்து பயிற்சிகள் அளிக்கப்படும். இலங்கையிலுள்ள மேற்கு ஜெர்மன் தூதரகம் இப் பயிற்சிப் பாடசாலையை இலங்கைப் போக்குவரத்துசபைக்கு அன்பளித்திருந்தது.

## பெண்ணின் சடலம் ஆற்றில் மிதந்து வந்தது

இலையாணை, சனி
ஒரு இளம் பெண்ணின் உயிரற்ற சடலம், தொண்டமானுறு செல்வச்சந்நிதி கோவிலுக்குப்பின்புறமுள்ள ஆற்றங்கரையில் மிதந்துவந்து ஒதுங்கியதைத் தொடர்ந்து மரணவிசாரணை அதிகாரி ஸ்தலத்துக்குச் சென்று மரணவிசாரணை நடத்தி உடலைப் பரிசோதித்தார். அதன் பின் அடையாளங்களும் குறிப்புகளும் எடுக்கப்பட்டன. ஆனால் இதுவரை அப்பெண் யாரென்று தெரியவில்லை. அச்சடலத்திற்கு உரிமை தேடி ஒருவரும் வராதபடியால் அரசாங்கத்தின் செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

பொது நிறமுடைய அப்பெண்ணின் காதுகளில் ஒரு சோடி தோடு மாட்டப்பட்டிருந்தது. அந்தத்தோடு இப்பொழுது தொண்டமானுறு கிராம சேவையாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

## பூனகரிக்கு விஜயம்

கோண்டாவில், ஞாயிறு
கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் செவ்வாய்க்கிழமை பூனகரிக்கு விஜயம்செய்து வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாகப் பார்வையிடுவார்.

## சிங்களக் கடிதத்தை திருப்பி அனுப்பினுர் பண்டிதர் இரத்தினம்

### ஸ்தலஸ்தாபன அமைச்சர்திருச்செல்வத்துக்கு

கிளிநொச்சி, ஞாயிறு
கிளிநொச்சி எம். பி பண்டிதர் கா. பொ, இரத்தினம் தமக்கு வந்த சிங்களக் கடிதமொன்றைத் திருப்பி அனுப்பிவிட்டார்.

ஸ்தலஸ்தாபன அமைச்சின் நிரந்தரக்காரியதரிசியிடமிருந்து இந்தக் கடிதம் கிளிநொச்சி எம். பி.க்கு வந்திருந்தது. தனிச் சிங்களத்தில் தமக்கு வந்த இந்தக் கடிதத்தைப் பார்த்து மிகவும் கோபங்கொண்ட எம். பி. அதனை மந்திரி திருச்செல்வத்துக்கே அனுப்பிவைத்துவிட்டார்.

'தமிழ்மொழி விசேடவிதிகள் அமுலில் இருக்கும்போது இந்தச் சந்தர்ப்பத்திலாவது இந்த நிலையா?' என்று பண்டிதர்இரத்தினம் திருச்செல்வத்திடம் கேட்டிருக்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

**தாதிகள்**

அனுபவமுள்ள தாதிகள். மருத்துவத் தேர்ச்சி விரும்பப்படும். உடனடியாக வேலை ஏற்கவேண்டும். 17-10-66-க்கு முன் விண்ணப்பிக்கவும். காரியதரிசி, திவுப்பகுதிஐக்கிய வைத்திய சாலை, வார்சவற்றுறை. 1407

**கணக்காளர்**

சுன்னாகத்தில் உள்ள பிரபல ஸ்தாபனமொன்றிற்கு தகுதிவாய்ந்த கணக்காளர் தேவை. பிணைப்பணம்கட்ட வேண்டும். நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். K. M. Nadarasa, No 233, K. K. S. Rd., CHUNNAKAM. 1125

### விற்பனைக்கு

**கார்**

சொந்தப்பாவிப்பில் உள்ள EY 4323 சோமசெற் ஒஸ்ரின் கார் விற்பனைக்கு உண்டு. கொம்பெனியில் புதிதாக இறக்கிய கார் மாதிரி ஒருவித பழுதும் இன்றி இருக்கின்றது. சன்லேட்டையேஸ் அன்றைக் கிளினிக், ராணிதியேட்டருக்கு அருகாமை, பெரிய கடை, யாழ்ப்பாணம். போன்: 474. 1418

**றைஸ்மில்**

490 புசல் அரிசி கோட்டாவுடன் கூடிய றைஸ்மில் ஒன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு விளம்பர இல. 1409 ''ஈழநாடு'' மே/பா என்ற விலாசத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 1409



**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
MYSTERIOUS
Dr. SATAN
(serial)



**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
**நீதிக்குப்பின் பாசம்**



**மகாத்மா தியேட்டர்**
(நெல்லியடி)
தினசரி 6-30, 9-30
போயா தினங்களில் காலை 10 மணி
சிவாஜி — சாவித்திரி
நடித்த
**திருவிளையாடல்**


## நிர்வாகிகள்

உடுப்பிட்டி, ஞாயிறு


கரணவாய் வடக்கு இளைஞர் விவசாயக்கழக புதுநிர்வாகிகளாகபின்வருவோர்தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. சி. கணேசமூர்த்தி, தலைவர்: திரு. மா. சிறீதரன், காரியதரிசி: திரு. சி. க. சேந்தன், தனாதிகாரி: திரு. க. கு நேரு


**REGAL—JAFFNA**
**NOW SHOWING**
Mc Queen & Ann Margaret
in
M.G.M's
THE CINCINNATI
KID
Adults only



**2வது வெற்றி வாரம்!**
கிங்ஸலி (ஈரமுழவு) பிளாஸா (வெள்ளவத்தை) நவப (கொம்பனித்தெரு)
விஜிதா (மஹீடன்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
மொடேர்ன் (பண்டாரவளை) வெலிங்டன் (காத்தான்குடி)
தீவொளி (நுவரெலியா) கல்யாணி (நாவலப்பிட்டி)




எம். ஜி. ஆர்., கே. ஆர். விஜயா
சௌகார் ஜானகி, நாகேஷ், பாலையா
மற்றும் பலர் நடிக்கும்
ஆர். ஆர். பிக்சர்ஸ்
**பணம் படைத்தவன்**


# நல்ல மனம் கொண்ட அனைவரையும் திரட்டுவோம்

## சிறுபான்மைத் தமிழர் விடுதலை இயக்கக் கூட்டத்தில் பேச்சு

யாழ்ப்பாணம் திங்கள்

''தமிழ் மக்களிடையே நீண்டகாலமாக இருந்து வரும் சாதிப்பாகுபாடு தமிழ்ச் சமுதாயத்தின் கறையாக இருக்கிறது. இந்தக் கறையைத் துடைக்க முயன்றவர் தோற்றுப்போயினர். நல்லமனம் கொண்ட அனைவரையும் ஒன்று திரட்டி செயல்பட வேண்டிய கடன் நம்மிடமுள்ளது''

இவ்வாறு அண்மையில் கரவெட்டியில் நடைபெற்ற சிறுபான்மை இனத்தவர் விடுதலை இயக்க முன்னணிக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய திரு. எஸ் செல்லத்தம்பி குறிப்பிட்டார்.

அடுத்துப் பேசிய பிரசார இயக்க அமைப்பாளர் கே. டானியல் குறிப்பிட்டவை வருவாறு:

இன்று சிறுபான்மைஇனத்தவர்களின் விடுதலை இயக்கத்தினராகிய எம்பணிமகத்தானது. இந்த நாட்டின் சமூகநல உரிமைகளை இழந்து வாடும் ஐந்து லட்சம் மக்களுக்கான உரிமைகளை நிலை நாட்டவேண்டியது நமது பொறுப்பாகும். 18-11-66ல் நாம்இந்தஉரிமைப்போராட்டத்தை உரமாக் நடத்தி வெற்றி காண்கின்ற பொறுப்பு ஒருவரிருவரிடமல்ல நம்மெல்லோரிடமுமேயுள்ளது. ஏனையோர் அதிசயிக்கக் கூடியளிதத்தில் கட்டுப்பாட்டுடனும் பொறுப்புடனும் இயக்கத்தை நடத்திவெற்றி காண்போம். மாக்சிஸ வாதிகளின் தூண்டுதலினால் இயக்கப்படுவது இவ்வியக்கம் என்ற கருத்து வெளியேயுள்ளது. எமது கட்டுப்பாடான செயலினால் அக் கருத்தை மாற்றி வெற்றி காணமுயல வேண்டும்.

சத்தியாக்கிரகத்தை முதலில் உடுப்பிட்டித தொகுதியிலேதான் ஆரம்பிக்கவேண்டுமென்ற தீர்மானம் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

# நோயாளிகளைத் தேடி டாக்டர்கள் வருவர்

## க்ஷயரோக பகுதி ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஞாயிறு

இதுவரை காலமும் க்ஷயரோகநோயாளர்கள் தாமாகவே இரண்டு வாரத்துக்கொருமுறை ஆஸ்பத்திரிக்குச் சென்று சிகிச்சை பெற்று வந்தனர். இம்முறையை மாற்றி கிழமைக்கு இரண்டு முறை குறிப்பிட்ட நோயாளிகள் வசிக்கும் பகுதிகளுக்குச் சென்று காங்கேசன்துறை பண்ணை ஆகிய இரு இடங்களைச்சேர்ந்த டாக்டர்களும் நர்சுகளும் சிகிச்சை அளிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஆனால் நோயாளிகள் தாமாக செல்வதாக இல்லை.

இவ்வொழுங்கின்படிஅண்மையில் புங்குடுதீவுக்குச் சிகிச்சையளிக்க டாக்டர்களும் நர்சுகளும் சென்றிருந்தனர். 40 நோயாளிகள் உள்ள இவ்விடத்தில் ஆக இருவர் மட்டுமே சிகிச்சை பெறச் சென்றனர் என்று தெரிகிறது.

அச்சுவேலி ஆஸ்பத்திரியில் வைத்து குறிப்பிட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க வைத்தியக் குழுவினர் முயன்றபோது அச்சுவேலி ஆஸ்பத்திரிப் பொறுப்பாளராக இருந்தவர் மேலிடத்து உத்தரவு தனக்குக் கிடைக்கவில்லையெனக் கூறி சிகிச்சை அளிக்க இடம் வழங்க மறுத்துவிட்டாராம்.

## ஆங்கிலப் பயிற்சி

அச்சுவேலி, ஞாயிறு

ஆகஸ்ட் மாதம் 16-ந் திகதி தொடக்கம் செப்டெம்பர் மாதம் 5-ந் திகதி வரை இலங்கையிலுள்ள பிரித்தானிய காரியாலயத்தினர் அனுமதியுடன் கல்விப் பகுதியினர் இலங்கையில் உள்ள ஜி. சி. ஈ. உயர்தர வகுப்புகளைக்கொண்ட பாடசாலைகளில் இருந்தும் சில ஆசிரியர்களைத் தெரிந்தெடுத்து ஆங்கிலத்தை இரண்டாவது பாஷையாகக் கற்பிக்கும் முறைபற்றிய பயிற்சியை திருமதி நவரத்தினம் போன்ற சில பிரமுகர்கள் அளித்தனர்.

இப்பயிற்சி கொழும்பில் இடம்பெற்றது. அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரியில்இருந்து திரு. இ. சங்கரப்பிள்ளை தெரிந்தெடுக்கப்பட்டுப் பயிற்சிபெற்றுத் திரும்பியுள்ளார்.

---

யாழ்ப்பாணம் திங்கள்

சுன்னாகம் பட்டின சபைத் தேர்தல் இவ்வருட இறுதியில் நடைபெறவிருப்பதாகவும், அதற்கான வாக்காளர் இடாப்புத் தயாராகிவிட்டதென்றும் அறியப்படுகின்றது.

இத்தேர்தலில் இலங்கை சமசமாசக் கட்சி, புரட்சிவாதசமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன ஒன்றுபட்ட முன்னணி ஒன்றை அமைக்கவும் முயற்சிகள் செய்யப்படுகின்றன. அப்படி உடன்பாடான முன்னணி உருவாகுமானால் சகல வட்டாரங்களிலும் முன்னணியைச் சேர்ந்த அங்கத்தவர்கள் போட்டியிடுவாரகளென்றும் தெரிய வருகின்றது.




## கொழும்பு

**திங்கள் 10 - 10 - 66**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45திரை இசை 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 தெம்மாங்கு இசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஏட்டிலிருந்து.

இரவு 6-15 கிராமசங்கீதம், 6-45 நிலையஒலிப் பதிவுகள், 7-30 கலைக்கோலம் — பல்கலை மதிப்பு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, [illegible] 9-30 தமிழ் ஒலி [illegible] 9-45 எங்கள் விருப்பம், 10-00 நேயர் விருப்பம்.


## விளம்பரம்

**நாவற்குளி**
**கிராம முன்னேற்ற சங்கம்**

8-10-66 ற்கு நியமிக்கப்பட்ட பரிசு வழங்கல் 29-10-66 சனிக்கிழமை பி. ப. 3 மணிக்குப் பின் போடப்பட்டுள்ளது என்பதை நண்பர்களுக்குத் தெரிவிக்கின்றோம். 31-10-66 வெளிவரும் 'ஈழநாடு' பத்திரிகையில் பரிசு பெற்றோர் விபரம் வெளிவரும்.

சங்க நிர்வாகிகள்.

1319

**தமிழ்க் கவிதை நாடக எழுத்துப்போட்டி 1966**

முடிவுத் திகதி:- 15-10-1966

**இலங்கைச் சாகித்திய மண்டலம்**

135, தர்மபால மாவத்தை, கொழும்பு-7. 1317


## முதல் சிங்களம் பின்ன ஆங்கிலம்

சங்கானை, ஞாயிறு

அண்மையில் கலாசாரப் பகுதியினரால் சாகித்திய விழாக்கொண்டாடுவதற்கென சங்கானைப்பட்டின சபைக்குத் தனிச்சிங்கள மொழியில் அனுப்பிவைக்கப்பட்டபணப்பட்டியலைத் தங்களுக்குத் தெரிந்த மொழியில் அனுப்புமாறு பட்டினசபை தலைவர் கலாசாரப்பகுதியினருக்குத் திருப்பி அனுப்பியதைத் தொடர்ந்து கலாசாரப் பகுதியினர் பணப்பட்டியலை ஆங்கிலமொழியில் அனுப்பி வைத்துள்ளனர்.

## நாடகம்!

நவாலி, ஞாயிறு

மறுமலர்ச்சி மன்றத்தினரால் தயாரிக்கப்பட்டு ஆறு தடவைகளாக அரங்கேற்றப்பட்ட ''அந்தநாளும் வந்திடாதோ'' என்ற சமூக நாடகம் ஏழாவது தடவையாக சுதுமலை முத்தமிழ் மன்றத்தின் ஆதரவில் சிற்மபாரதி வித்தியாலயத்தில் கலைஅரசு சொர்ணலிங்கம் தலைமையில் அடுத்த புதன் கிழமை நடைபெறவிருக்கிறது. காந்திய தத்துவங்களை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட இந்நாடகத்தின் ஆசிரியர் கூட்டுறவாளர் திரு. பொ. செல்வரத்தினம் திருநெல்வேலி ஏ. மகேஸ்வரன் இதன் இயக்குனராவர்.

## புதிய கட்டடம்

உடுப்பிட்டி, ஞாயிறு

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் பல லட்சம் ரூபா செலவில் விஞ்ஞான, மனையியல் கூடத்திற்கெனப் புதிய மேல்மாடிக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடம் பழைய மாணவர்களாலும். ஆசிரியர்களாலும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. இம்மாதம் 14-ந் திகதி மாலை 5 மணிக்கு கலாநிதி திரு. ஆனந்தகுருகே கட்டடத்தைத் திறந்துவைப்பார்.

## இஸ்லாமிய சோஷலிச முன்னணி கிளை?

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கை இஸ்லாமிய சோஷலிச முன்னணியின் கிளைத்தாபனம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவுவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன.

இவ்இஸ்லாமிய சோஷலிச முன்னணியின் தலைவராக ஜனாப் பதியுதீன் முகமத் விளங்குகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியநாடுகளிடையே பொருளாதார உறவை வலுப்படுத்துவதே பாரதத்தின் நோக்கம்

## அமெரிக்கா ஆயுதம் தராவிடில் வேறு நாடுகளிடம் பெறுவோம்

### தாய்லாந்தில் இந்திய உப ஜனாதிபதி

பாங்கொக்,ஒக்.9

"ஆசிய நாடுகளிடையே அதிக பொருளாதாரத் தொடர்புகளை ஏற்படுத்தி விருத்தி செய்வதே பாரதத்தின் நோக்கமாகும். தாய்லாந்துடன் உள்ள உறவை வலுப்படுத்த முயற்சி எடுக்கபாரதம் விரும்புகிறது. அதே போல் தாய்லாந்தும் விரும்புகிறது எனவே நான் நம்புகிறேன்."

இவ்வாறு தாய்லாந்தில் பத்திரிகை நிருபர்களிடையே பேசுகையில் இந்திய உப ஜனாதிபதி டாக்டர் ஸாகீர் ஹுசேன் கூறினர்.

இதற்கு முன்னர், இந்திய உப ஜனாதிபதி டாக்டர் ஸாகீர் ஹுசேன் நேற்று தாய்லாந்து வந்துசேர்ந்தார் அவர் மூன்று நாட்கள் அங்கு தங்கியிருப்பார். தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்குச் சுற்றுப் பிரயாணம் மேற்கொண்டுள்ள உப ஜனாதிபதி, அப்பிரயாணத்தில் ஒரு கட்டமாக பாங்கொக் வந்து சேர்ந்தார்.

**விமான நிலையத்தில் வரவேற்பு**

பாங்கொக் விமான நிலையத்தில் அவரை வரவேற்க தாய்லாந்துப் பிரதமரும், மற்றும் முக்கிய பிரமுகர்களும் வந்திருந்தனர். இந்தியர்கள் உட்பட 2000 க்கும் பேற்பட்ட மக்கள் அங்கு குழுமியிருந்தனர். பிரதமர் அவருக்கு மாலை அணிவித்து கௌரவித்தார். பிறகு அங்கிருந்து ராஜாங்க ஊர்வலத்தில் அரசினர் விருந்தாளிகள் இல்லத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

**வியட்னும்**

பின்னர் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உப ஜனாதிபதி பலகேள்விகளுக்கும் சரளமாகப் பதிலளித்தார்.

வியட்னும் பிரச்னை பற்றி விவாதிக்க மணிலாவில் கூடவிருக்கும் ஏழு நாட்டு உச்சி மாநாடு பற்றிக்குறிப்பிடுகையில், அம்மாநாட்டில் கூடும் ஏழு நாடுகளும் வியட்னும் பிரச்னையில் சம்பந்தப்பட்ட நாடுகளாக இருப்பதாகக் கூறினர். இந்தியா சர்வதேசக் கட்டுப் பாடுட்க் கமிஷனில் ஓர் அங்கத்துவ நாடாக இருப்பதால், அது அம் மாநாட்டில் பங்குபற்ற முடியாத நிலையிலிருப்பதாகவும் அவர் கூறினர்.

வியட்னும் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு முதல் நடவடிக்கையாக அமெரிக்காதனது குண்டு வீச்சை முற்றாகநிறுத்த வேண்டுமென்பதே இந்தியாவின் கொள்கையாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

**அமெரிக்க ஆயுதம்**

பாகிஸ்தானுக்கும், பாரதத்துக்கும் அமெரிக்கா ஆயுதங்கள் அனுப்புவதை நிறுத்தத் தீர்மானித்திருப்பது பற்றி அவரிடம் கேட்டபோது, "அது அமெரிக்காவின் வியாபாரத்துக்கே நஷ்டமாகும்அவர்கள் தமது ஆயுதங்களை எமக்கு விற்பனை செய்ய விரும்பாவிட்டால், நாம் அப்படி விரும்பும் வேறு நாடுகளிலிருந்து எமது ஆயுதங்களை வாங்குவோம்" என்றுர் டாக்டர் ஹுசேன்.

**பாகிஸ்தான்**

பாகிஸ்தான் எந்த நேரமும் என்ன நடக்குமோ என்ற சூழ்நிலை ஒன்றை உருவாக்கி வருவதாகக் கூறிய உப ஜனாதிபதி அப்படி ஏதும் நேர்ந்து விடுமென்று தாம் நம்பவில்லையென்று கூறினர்,

**சமாதான நோக்கம்**

இந்தியாவுக்கு அணு ஆயுத உற்பத்திக்கானசக்திஇருந்த போதும்அது அணுசக்தியைச் சமாதான நோக்கங்களுக்காக விருத்தி செயயவே விரும்புவதாகவும் டாக்டர் ஸாகீர் ஹுசேன் கூறினர்

## பிரி. வெளிவிவகார காரியதரிசி குரோமிக்கோவை சந்தித்தார்

### ரஷ்ய கொள்கையில் மாற்றமில்லை

நியுயோர்க்,ஒக்.9

ரஷ்ய வெளிவிவகாரமந்திரி திரு. அண்ட்ரி குரோமிக்கோவும், பிரிட்டிஷ் வெளிவிவகாரக் காரியதரிசி திரு. ஜோர்ஜ் பிரவுணும் இன்று வியட்னும்பற்றி நியுயோர்க்கில் சந்தித்துப் பேசினர். ஆனல், இப்பேச்சுவார்த்தைகளினல் சாதகமான முடிவு எதுவும் இடைக்கவில்லை.

திரு, ஜோர்ஜ் பிரவுண் வியட்னும்பற்றிய 6 அம்சத் திட்டத்தை திரு. குரோமிக்கோவுக்குச் சிபார்சு செய்து வலியுறுத்தினர். வியட்கொங் உட்பட சம்பந்தப்பட்ட பிரிவினர் எல்லாவற்றையும் சமாதான மகாநாடொன்றுக்கு அழைக்க வேண்டுமென்றும், ஜெனிவா மகாநாட்டைப் போன்ற ஓர் மாநாட்டைக் கூட்டுவதற்கு ரஷ்யா முயற்சிஎடுக்க வேண்டுமென்றும் பிரிட்டிஷ் மந்திரி கேட்டுக்கொண்டார். வியட்னுமைச் சர்வதேசக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரவேண்டும் எனவும், சைப்பிரஸ்போல் அங்கு நிரந்தர சமாதானப் படை ஒன்று ஐ. நா. தலைமையில் நிறுவப்படவேண்டுமெனவும் அவர் மேலும் கருத்துத் தெரிவித்தார்.

அவருடைய கருத்துக்களைப் பொறுமையுடன் கேட்ட ரஷ்ய வெளிவிவகாரமந்திரி திரு. குரோமிக்கோ, ரஷ்யாவின் அடிப்படைக் கொள்கையில் மாற்றம் எதுவும் செய்யத் தயாராக இருப்பதாகக் கூறவில்லை. சர்வதேச மாநாட்டை அழைக்க எதுவித முயற்சி எடுப்பதாகவும் உறுதி அளிக்கவில்லை. ரஷ்யாவின் வியட்னும் கொள்கை முன்னர்போலவே இருக்குமென்றும், மாற்றம் செய்யப்படும் சாத்தியங்கள் இல்லை எனவும் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

பிரிட்டனும் ரஷ்யாவும் இந்தோ சீனுமீது கூட்டப்பட்ட ஜெனிவா மாநாட்டின் இணைத் [illegible] வர் என்பது [illegible] பிடத்தக்கது.

## பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி இந்திராவுடன் பேச்சுவார்த்தை

புதுடில்லி, ஒக். 9

ஆயுதப்பரிகரணம், அணு ஆயுதப் பிரச்னை இவை பற்றி இங்கு வந்துள்ள பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி சவுதெண்ட் பிரபு, இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடனும், இந்திய வெளிவிவகார மந்திரி திரு. சுவர்ண்சிங்குடனும் பேச்சுவார்த்தைகள் நடாத்தினர்.

இப்பேச்சுவார்த்தைகளின் போது அணு ஆயுத உற்பத்தியைச் சமாதான நோக்கங்களுக்காகப் பாவிப்பது பற்றியும், அணு ஆயுத வல்லரசுகள் அணு ஆயுத வல்லரசுகளல்லாத நாடுகளுக்கு ஓர் உத்தரவாதம் அளிப்பது பற்றியும் விவாதிக்கப்பட்டது. இந்திய அணுசக்திக் கமிஷனின் தலைவர் திரு. விக்ராம்சராபாயும்இப்பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டார்.

## ரயில்-பஸ் விபத்தில் 10 பேர் மரணம்

கியூபெக், ஒக். 9

இங்கு ரயிலும், பள்ளிக்கூட பஸ் ஒன்றும் மோதிக்கொண்டதன் விளைவாக 10 பேர் உயிரிழந்தனர். நடன நிகழ்ச்சி ஒன்றுக்காக உயர் பள்ளி மாணவர்களைக் கொண்டுசென்ற பஸ் விபத்தின்காரணமாக தீப்பற்றிக் கொண்டது. (பி டி ஸி)

## ஈராயிரம் வியட்காங்கியர் மாண்டனர்

சைகோன், அக். 9

தென் வியட்னுமின் மத்திய கரையோரப்பகுதியில் அமெரிக்க விமானங்கள் நடத்திய குண்டுவீச்சிலும் பீரங்கித்தாக்குதலிலும் இரண்டாயிரம் வியட்காங்கியர் மாண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கரையோரப் [illegible] இன்றைல் அழிந்துவிட்டது.

## பிரிட்டனின் 6 அம்சத் திட்டத்தை வட வியட்னும் நிராகரித்தது

ஹனேய், ஒக் 9

வட வியட்னும், பிரிட்டனின் வியட்னும் பற்றிய 6 அம்ச சமாதானத்திட்டத்தை நிராகரித்துள்ளது. இத்திட்டம் முன்னர் அமெரிக்க ஐ. நா. தூதுவர் திரு. கோல்ட்பேர்க் வெளியிட்டிருந்த கருத்துக்களையே திரும்பவும் கூறியிருப்பதாக வட வியட்னும்கூறியுள்ளது.

இத்திட்டத்தை வெளியிட்டதன் மூலம், பிரிட்டன், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளைப்பின்பற்றுகிறது என்பதை நிரூபித்துள்ளது என்று கூறியுள்ள வட வியட்னும், ஜெனீவா மாநாட்டின் தலைவர்களில் ஒன்றுன பிரிட்டன் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடன் கூட்டுச்சேர்ந்து நடவடிக்கைகள் எடுப்பதை வன்மையாகக் கண்டித்தது.

## அமெரிக்க விமானங்கள் ஆறு வீழ்த்தப்பட்டன

சைகோன், ஒக் 9

ஆறு அமெரிக்க விமானங்களைச்சுட்டு வீழ்த்தியதாக வட வியட்னும் நேற்று இங்கு அறிவித்தது. வியட்னும் போரில் இதுவரை சுட்டு வீழ்த்தப்பட்ட அமெரிக்க விமானங்களின் தொகை இத்துடன் 1487 ஆக உயர்ந்துள்ளது.

## மாணவர் பேரணியில் வெடிப்பு

### 20 செங்காவலர் மரணம்

ஹொங்கொங், ஒக். 9

அண்மையில் சீனுவிலுள்ள ஹுனான் மாகாணத்தில் நடைபெற்ற மாணவர் பேரணி ஒன்றில் ஏற்பட்ட வெடிப்பின் விளைவாக 20 செங்காவலர் மரணமடைந்ததாகவும், 200க்கும் மேற்பட்டோர் காயமுற்றதாகவும் ஹொங்கொங்கிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்துள்ளன. சீன அதிகாரிகள் வெடிப்புக்கான காரணத்தைப் புலன்விசாரித்துவருவதாக அறியப்படுகிறது.

## வட வியட்னுமுக்கு மலேஷியா துருப்புகள் அனுப்பாது

நியூயோர்க், ஒக். 9

வியட்னுமுக்கு தன் துருப்புக்களை அனுப்பும் எண்ணம் மலேஷியாவுக்கு இல்லை என்று மலேஷிய உதவிப் பிரதமர் திரு. துன் அப்துல் ரஸாக் இங்கு தெரிவித்துள்ளார். அப்படி எண்ணம் உண்டாவெனப் பத்திரிகையாளர் கேட்டபோது மேற்கண்டவாறு பதிலளித்த உதவிப் பிரதமர் எந்த இடத்துக்காவது தனது துருப்புக்களை அனுப்பும் நிலையில் மலேஷியா இல்லை. ஆகவே இந்தக் கேள்விக்கு இடமேயில்லைஎன்று மேலும் கூறினர்.

## ஏமன் ஜனதிபதி கொலை முயற்சி

கெய்ரோ, ஒக். 9

சில வாரங்களுக்கு முன், ஏமன் ஜனதிபதி அப்துல்லா சலாலைக் கொலைசெய்ய முயற்சி நடைபெற்றதாக வாரப் பத்திரிகையான 'அக்பர் எல்யோம்' இங்கு அறிவித்துள்ளது.

## வானவெளி வீரருக்கு மாஸ்கோ கௌரவம்

மாஸ்கோ, ஒக். 9

ரஷ்ய வானவெளி வீரர் 11 பேரைக் கௌரவிக்கு முகமாகத் தனது பிரதான வீதிகளிலொன்றை 'வானவெளி வீரர் சாலை' எனப் பெயரிட மாஸ்கோ நகரம் தீர்மானித்துள்ளது.

உலகின் முதலாவது வானவெளி வீரன் யூரி ககாரின், முதலாவது வானவெளி வீராங்கனை வலென்டினு திக்கோவாபேவா—தெரஷ்கோவா மற்றும் விண்வெளியில் நடந்த முதலாவது மனிதன் அலெக்ஸி லியோனுவ் ஆகியோரின் உருவச் சிலைகள் இங்கு நிறுவப்படும். (பி டி ஸி)

## பிரதமர் பேச்சு

மாஸ்கோ, ஒக். 9

கடந்த புதன்கிழமை சீன ரஷ்யக் கொள்கைகளைக் கண்டித்துப் பேசிய வட கொரியப் பிரதமர் கிம் இல் சங்கின் பேச்சைப் 'பிராவ்டா' எதுவித குறிப்புமின்றி இங்கு வெளியிட்டது.

## புதுவருட நிர்வாகிகள் சபை

கொழும்பு, சனி

கரைநகர் யாழ். நகர் கலாசாலை பழைய மாணவர் சங்கப்புதுவருட உத்தியோகத்தராக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்: தலைவர்: திரு. க. சிவராசா, உபதலைவர்கள்: திரு. வை. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. தர்மலிங்கம், பொதுச்செயலாளர்: திரு. அ திருநீலகண்டன், உதவிச்செயலாளர்: திரு. மு. சோமசுந்தரம், திரு. ஆ. பரம்சோதி, பொருளாளர்: திரு. சி. கதிரவேலு, உதவிப்பொருளாளர் திரு. ச. மாணிக்கலிங்கம், கணக்குப்பரிசோதகர்: திரு. ஆ. திருவாதிரை, செயற்குழு அங்கத்தவர்கள்: திருவாளர்கள் க. நடராசா, வே. நடராசா, செ. மாணிக்கவாசகர் மு. சித்திரசேனன், க. வைத்திலிங்கம், மு. மகாதேவன், க. பத்மலிங்கம்.

## புதிய காரியாதிகாரி

பரந்தன், ஞாயிறு

கரைச்சிப் பகுதிக்கு காரியாதிகாரியாக விருந்த திரு. ஏச். இ. பின்னேநாயகம் யாழ்ப்பாணம் பட்டினப்பகுதிக் காரியாதிகாரியாக மாற்றலாகிச் சென்றதையொட்டி கரைச்சிப் பகுதிக்குப் புதியகாரியாதிகாரியாக திரு ஆர். யோகநாதன் இம்மாதம் முதல் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டிருக்கிறுர்.

## தமிழரசு பொதுசபை கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"பொதுச்சபைக் கூட்டத்தை பின் போடவேண்டாம். 13-ம் தேதி யாழ்ப்பாணத்தில் நடத்தவும்" என யாழ்ப்பாணம், நல்லூர், கிளிநொச்சி, தமிழரசு கட்சி வாலிபமுன்னணி கிளைகள் தந்திமூலம் தலைமைப்பீடத்தைக் கேட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

திருப்தி என்றும் மன நிம்மதியையும் சந்தோஷத்தையும் கொடுக்கின்றது. நாளொன்றிற்கு நூறு ரூபா உழைக்கும் ஒருவன், ஐந்நூறு ரூபா உழைக்கும் ஒருவரின் நிலையுடன் தன்னை ஒப்பிட்டு எடைபோட்டுக்கொள்ளக்கூடாது. இப்படி செய்வதால் மனநிம்மதியற்று அதிருப்தியே அவன் அடைவான், மாதம் இருபது ரூபா உழைக்கும் ஒருவருடன் தன்னை எடைபோட்டு பார்க்கவேண்டும். —சுவாமி சிவானந்தா

ஈழநாடு
EELANADU National Tamil Daily; Post Box 49 JAFFNA.
Telegrams: EELANADU Jaffna; Telephone 5..
யாழ்ப்பாணம் புரட்டாதி ௴ 24 ௳ (10-10-66)

## மாணவர் ஆர்ப்பாட்டம்

சீனாவில் சமீப காலத்தில் கலாசாரப் புரட்சியின் பேரால் ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்பவர்களின் ஆதரவுடன் 'செங்காவலர்' என்றழைக்கப்படும் இளைஞர் இயக்கத்தினர் தலைவர் மாசேதுங்கின் கொள்கைக்கு விரோதமானவர்களை எல்லாம் வன்முறைச் செயல்களினால் இம்சைக்குள்ளாக்கி வருவதையும், பழைய தொழிற்சங்கத் தலைவர்களை அகற்றிப் புதியவர்களை நியமித்தும் பழைய கொள்கைகளைப் பிரதிபலிப்பதாகக் கருதப்படும் புத்தகங்களையும், நூலகங்களையும் நாசமாக்கியும் ஆர்ப்பாட்டங்கள் புரிந்துவருவதையும் ஜனநாயகத்தில் நம்பிக்கைகொண்ட நாடுகள் எல்லாம் கண்டித்துள்ளன.

அதேவேளையில் இந்தியாவில் அண்மையில் பல மாகாணங்களிலும், தலைநகரங்களிலும் தலைதூக்கியுள்ள மாணவர் ஆர்ப்பாட்டங்களும் அதன் காரணமாக நடைபெற்றுள்ள பலாத்கார நாசவேலைகளும் கவலையளிப்பனவாக இருக்கின்றன. இம்மாதிரியான ஆர்ப்பாட்டங்களுக்கும் நாசவேலைகளுக்கும் எதிர்க்கட்சியினரின் தூண்டுதல் அல்லது மறைமுகமான ஆதரவுதான் ஓரளவுக்கு காரணமென்று கருதுவதற்கு நியாயமிருக்கின்றது.

இந்த ஆர்ப்பாட்டங்களில் அரசியல் அம்சத்தைப் பொறுத்தவரை ஆரம்பத்தில் மொழிப் பிரச்னையும், எல்லைப் பிரச்னையும் அடிப்படையாகக் காணப்பட்டன. மாணவர்கள் மத்தியில் நிலவும் குறைபாடுகளும், கஷ்டங்களுமே இதற்கு உண்மையான காரணங்கள் என்று இந்தியத் தலைவர்களும், சிந்தனையாளர்களும் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

இந்த அடிப்படைக் குறைகளையும், கஷ்டங்களையும் பற்றி ஆராயும்போது அவை பெரும்பாலும் பிரத்தியட்சமாக விளங்குகின்றன.

தற்போதைய சூழ்நிலைகளில் பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும் மாணவர்களுக்கு போதிய இட வசதியின்மையும் கல்வி பெறுவதற்கான சாதன வசதியின்மையும் ஒரு குறைபாடாகவே இருந்து வருகின்றது. இதைவிட கல்விபோதன முறையிலும், பல்கலைக்கழக நிர்வாகத்துறையிலும் பெரும்பாலும் குறைபாடுகள் இருந்து வருகின்றன. இத்தகைய குறைபாடுகளுக்கும் கஷ்டங்களுக்கும் இடையில் பரீட்சைகளில் சித்தியடைந்து வெளிவரும் மாணவர்களில் அநேகர் வேலையில்லா திண்டாட்டங்களுக்குள்ளாகவும் நேரிடுகின்றது. இப்படிக் குறைகளுக்கும் கஷ்டங்களுக்கும் உள்ளாகும் மாணவர்களும், இளைஞர்களும் இயல்பாகவே ஆர்ப்பாட்டங்களிலும், எதிர்ப்பு இயக்கங்களிலும் இறங்கும் மனப்பான்மையைப் பெற்றுவிடுகின்றார்கள்.

இலங்கை அரசியல் தலைவர்களும் தேசிய உயர்தரக் கல்விச் சபையினரும் வெளிநாடுகளில் நடைபெற்றுவரும இளைஞர் ஆர்ப்பாட்டங்களையும், மாணவர் கிளர்ச்சிகளையும்— அவைகளுக்கான அடிப்படைக் காரணங்களையும் உன்னிப்பாகக் கவனிக்கவேண்டியது மிக அவசியம். உயர்தர கல்வி பெறும் வாய்ப்புக்கள் இல்லாததனாலும் பல்கலைக்கழகங்களில் இடவசதிகள் இல்லாக் குறைகளினாலும், பரீட்சைகளில் தோல்வியுற்று மனக்குமைச்சல்களுக்குள்ளாகும் மாணவர்கள் மத்தியில் அமைதியின்மை உருவாக வழிபிறக்கின்றது. தற்போது பல்கலைக்கழகத்தில் வைத்திய, பொறியியல் பகுதிகளின் முதல் சோதனைகளில் சித்தியடையாதவர்களை அகற்றிவிட வேண்டுமென்று சர்வகலாசாலை அதிகாரிகள் செய்திருக்கும் முடிவு மாணவர்களை மேலும் விரக்தி மனப்பான்மைக்கு உள்ளாக்குவதாக இருக்கின்றது.

எனவே, உயர்தரக் கல்வி பயிலும் மாணவர்களின் குறைகளை அரசாங்கமும், தேசிய உயர்தரக் கல்விச் சபையினரும் தீர்க்கமாக ஆராய்ந்து அவைகளுக்குத் தகுந்த பரிகாரம் செய்யவேண்டியது அவசியம்.

இந்தியாவில் ஆர்ப்பாட்டங்களின் காரணமாக உள்நாட்டு அமைச்சர் குல்சாரிலால் நந்தாவும் கல்விமான்களும் மாணவர்களின் வன்முறை இயக்கங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான வழிகளை மட்டும் ஆராயாமல், அவர்களின் குறைபாடுகளையும், கஷ்டங்களையும் அறிந்து அவைகளுக்குப் பரிகாரம் காணுவதிலும் நாட்டத்தைச் செலுத்தியுள்ளது பாராட்டுக்குரியதொன்றாகும்.

வேலையில்லாத் திண்டாட்டத்துக்குள்ளாகி கஷ்டம் அனுபவிக்கும் ஜி. சி. இ. சாதாரண பரீட்சையில் சித்தியடைந்துள்ள மாணவர்களைத் தம்வசப்படுத்தி ஒன்று சேர்த்து அரசியல் ஆர்ப்பாட்டங்களுக்கும் இயக்கங்களுக்கும் பயன்படுத்துவதற்கு இலங்கையிலும் கூட சில எதிர்க்கட்சியினர் முயற்சிகள் மேற்கொண்டு வருவதாகச் செய்திகள் அடிபடுகின்றன. இம்முயற்சிகள் முறியடிக்கப்படுவது மட்டுமல்ல, மாணவர்களின் குறைபாடுகளையும் கஷ்டங்களையும் ஆராய்ந்து அவைகளைக் களைவதற்கான உருப்படியான செயல் திட்டங்களை அமுல் நடத்துவதும் அவசியம். பரீட்சைகளில் சித்தியடையும் மாணவர்களுக்கு உத்தியோகம் கிடைக்க வசதி செய்தல் வேண்டும் அல்லது உத்தியோகம் பெறுவதற்குத் தேவையான உயர்கல்வி பெறுவதற்கு வழியேற்படுத்தல் வேண்டும். மாணவர்களுக்குத் தொழிற்கல்வியும், தொழிற்பயிற்சியும் அளிக்கப்படுவதற்கான மார்க்கங்கள் உருவாக்கப்படல் வேண்டும்.

மாணவர்களையும் பரீட்சைகளில் சித்தியடைந்து வேலையில்லாதிருக்கும் இளைஞர்களையும் குறித்து உதாசீனமாக இருந்துவிடாமல் அவர்களின் குறைகளை அறிந்து அவைகளை நிவர்த்தி செய்வதன் மூலம் அவர்கள் மத்தியில் நம்பிக்கை உருவாவதற்கு ஏற்பாடு செய்யவேண்டியது அரசாங்கத்தின் கடமை.

கருத்தரங்கம்

# தொழிற் பிரச்னைகளைத் தீர்க்க நியமன அங்கத்தவர் தேவை

—க. ஞானத்துரை—
(முன்னாள்பரந்தன் இரசாயன தொழிலாளர்சங்கதலைவர்)

நாட்டின் பொருளாதார விருத்திக்கு தொழிலாளி-முதலாளி உறவு அவசியம் என்பது உண்மையிலேயே எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம்.

ஆனால் இந்த நாட்டிலே தொழிலாளி-முதலாளிக்கு இடையே பகை ஏற்படுவதற்குப் பிரதானமாக இரண்டு காரணங்களையே நடைமுறையில் காண்கிறோம். (1) நிர்வாகத்தின் ஒருபிரிவினர். (2) தொழிற் சங்கத் தலைவர்களில் ஒருபிரிவினர்.

முதலாவதாகக் குறிப்பிட்ட "நிர்வாகத்தின் ஒரு பிரிவினர்" என்பதை ஆராய்வாம்.

### நிர்வாகம்

இன்று இலங்கையின் பொருளாதாரத் திட்டங்களில் நிர்வாகத் துறைகளில் தேவைக்கு அதிகமானோர் புகுத்தப்படுகின்றனர். இவர்களுக்கு பொருளாதாரத் திட்டங்களிலே நாளொன்றிற்கு எட்டு மணித்தியாலத்திற்கு செய்யக்கூடிய அளவு வேலை இல்லாமையினாலே சாதாரணமாக, இரண்டு மணித்தியாலங்களில் அல்லது மூன்று மணித்தியாலங்களில் இவர்களின் குறிக்கப்பட்ட வேலைகள் முடிந்துவிடுவதனால், மிச்ச நேரத்தைப் பொழுதுபோக்குக்குப்பயன்படுத்திக் கொள்வதற்காக, தொழிற் சங்கங்களில் வேண்டுமென்றே குழப்பத்தைத் தூண்டிக் கொண்டேயிருப்பார்கள். தொழிலாளி-முதலாளி பகை ஏற்படும் இடங்களில் எல்லாம் மிக நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தால், நிர்வாகத்தில் ஒருபகுதியினரும் இக்குழப்பத்தில் கலந்து இருக்கிறார்கள் என்பது வெளிப்படும்.

இரண்டாவதாகக் குறிப்பிட்ட "தொழிற் சங்கத் தலைவர்களில் ஒரு பிரிவினர்" என்பதை ஆராய்வாம்.

### நேர்மையற்ற தெரிவு

தொழிற்சங்கத் தலைவர்கள் தொழிலாளர்களாலேயே தெரியப்படுபவர்கள் என்பது சாதாரண வழமையான கொள்கையாயிருந்தபோதிலும், சங்க உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யும் காலங்களில், நீதியை நிலைநாட்டக்கூடிய அதிகாரம் பெற்ற மத்தியஸ்தர்கள் யாரும் சமூகம் கொடுக்காமல் இருப்பதனால், தெரியப்படும் உத்தியோகத்தர்கள் அத்தனை பேரும் நீதியின் பெயரிலேயே தெரியப்படுவதில்லை என்பதை நேர்மைக்குக் கட்டுப்பட்ட எந்தத் தொழிற் சங்கவாதியும் மறுக்கமாட்டார்.

இந்த ரீதியிலே தெரிவு செய்யப்படும் தொழிற்சங்க உத்தியோகத்தர்கள், தொழிலாளர்கள் மத்தியிலே தொழிலாளர்கட்காகவும், முதலாளிமார் மத்தியிலே முதலாளிக்காகவும் பேசக்கூடிய சந்தர்ப்பவாதிகளாக இருப்பதனால் முதலாளிமார் தொழிலாளிகளைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கவும், தொழிலாளிகள் முதலாளிகளைச் சந்தேகக் கண்கொண்டுபார்க்கவும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றதென்பதைக் கொஞ்சமன்றி ஆராய்ந்தாலன்றி விளங்கிக்கொள்ள முடியாது.

### நியமன அங்கத்தவர்

மேற்கூறிய இரண்டு காரணங்களும் உண்மையிலே தொழிலாளி— முதலாளி பகையை ஏற்படுத்துகின்றன என்பதை ஒப்புக்கொண்டால் "நியமன அங்கத்தவர்" ஒருவரை நியமிக்கவேண்டுமென்பது புலனாகும்.

அரசாங்கம் நாட்டிலே நீதியை நிலைநாட்டுவதற்காக பார்லிமெண்டிலே நியமன அங்கத்தவர் நியமிப்பதுபோல அரசாங்க கூட்டுத் தாபனங்களைப் பொறுத்தவரை. ஒவ்வோர் அரசாங்க கூட்டுத் தாபனத்திற்கும், ஆங்காங்கே வேலை செய்யும் தொழிலாளிகளில் ஒருவரை நியமன அங்கத்தவராக நியமித்தால், அந்த நியமன அங்கத்தவரே தொழிலாளிகளின் உண்மையான குறைபாடுகளை நிர்வாகத்திற்கு எடுத்துக் கூறவும், நிர்வாகம் செய்யும் பிழைகளை மேலதிகாரிகளுக்கு எடுத்துக்கூறவும், பொருளாதாரத் திட்டங்களில், அநியாயமாகச் செலவழிக்கப்படும் வீண்செலவுகளை மேல் அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறவும் சந்தர்ப்பம் ஏற்படும்.

### சுமுக உறவு

முதலாளி வர்க்கம் நேர்மையாக நடக்கவும், தொழிற்சங்கங்கள் திறமையாக நடக்கவும், நீண்ட காலமாகத் தங்கள் உரிமையை அனுபவிக்காது கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் தொழிலாளர் தங்கள் உரிமையைப்பெறச் சந்தர்ப்பம் ஏற்படும்போது தொழிலாளி—முதலாளிஉறவு சுமுகமாகவே வளரும்.

இந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு முதலாளி—தொழிலாளி உறவு சுமுகமாக அமைவது அவசியம். இதை மனதிற் கொண்டே கைத்தொழில் தகராறு கமிஷன் ஒன்றும் தற்போது நியமிக்கப்பட்டுள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் தொழிற்துறை சம்பந்தப்பட்ட சகல கருத்துக்களையும் வாசகர்களிடமிருந்து வரவேற்கிறோம். கட்டுரைகளை கருத்தரங்கு, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுதவும்.

## நாட்டிலும் நகரிலும்

வருகிற 23-ந் திகதி ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி ஐ. நா. சபையில் சங்கீதக்கச்சேரி நிகழ்த்தும் போது ராஜாஜி ஆங்கிலத்தில் எழுதிய பாடல் ஒன்றையும் பாடுவார் என்பது பொதுவாக எல்லோரும் அறிந்த விஷயம். ராஜாஜியின் ஆங்கிலப் பாடலின் தமிழ் மொழி பெயர்ப்பு ஒன்று, சில நாட்களுக்குமுன் 'ஐயாறனில்' வெளி வந்தது.

இப்பாட்டை ஸ்ரீமதி எம். எஸ். பியானோ வாத்திய சகிதமாக ஆங்கிலத்திலேயே பாடுவாராம். இதற்கு மெட்டு அமைத்தவர் சென்னை வானொலியில் கடமையாற்றும் மேனாட்டு சங்கீத டைரக்டர்.

இதைத் தவிர, காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள் அருளித் தந்த ஓர் ஆசீர்வாதப் பாடலையும் அவர் அந்தக் கச்சேரியில் பாடுவார் என்று தெரிய வருகிறது. சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட இந்தப் பாடலுக்கு பம்பாயின் பிரபல சங்கீத டைரக்டரான ஸ்ரீ வசந்த தேசாய் மெட்டு அமைத்திருக்கிறார். இதை ஸ்ரீமதி எம். எஸ். வயலின், மிருதங்கம், கடம் முதலிய பக்கவாத்தியங்கள் சகிதமாக கர்நாடக பாணியிலேயே பாடுவார்.

ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் சமஸ்கிருதத்தில் எழுதிய ஆசீர்வாதப் பாடலின் தமிழாக்கம் வருமாறு:

"எல்லா இதயங்களையும்
வெல்லும் சக்தி வாய்ந்த
சிநேகத்தைப் பேணி
வளருங்கள்!
பிறரையும் உங்களைப் போல்
மதியுங்கள்!
போரைப் புறக்கணித்து
போட்டியை தவிருங்கள்!
பிறரை ஆக்கிரமிக்கும்
தவறை கை விடுங்கள்!
பரந்த இப்பூமாதேவி
நாம் விரும்பியதெல்லாம்
தரக் காத்திருக்கிறாள்!
கருணையே உருவான
எந்தாய் எம்பிரான்
எம்மிடம் இருக்கிறார்!
உலகத்திரே! உங்களை
கட்டுப்படுத்துங்கள்,
ஈயுங்கள், கருணை காட்டுங்கள்!
எல்லா மனிதரும்
மகிழ்ச்சியும் சுபீட்சமும்
பெறுவாராக!

ஃ ஃ ஃ

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி இவ்வாறு இந்தியாவின் கலைத் தூதராகவும், ஞான தூதராகவும் அமெரிக்கா முதலிய மேனாடுகளுக்குச் செல்லும் இந்த வேளையில் பம்பாயில் ஓர் அதிசயம்நிகழ்ந்திருக்கிறது. 'பீட்டில்ஸ்' என்ற ஆங்கில 'லாப்' சங்கீதக்கோஷ்டி ஜப்பான் முதலிய கீழத்தேச நாடுகளுக்கு விஜயம் செய்து பல இடங்களில் வெற்றிமாலையும் சில இடங்களில் கல்லெறியும் வாங்கிக்கொண்டு விடு திரும்பும் வழியில் ஐந்து 'பீட்டில்'களில் ஒன்று பம்பாயில் தங்கிவிட்டது. ஜோர்ஜ் ஹாரிஸன் என்ற இந்த 'பீட்டிலுக்கு' இந்திய சங்கீதத்திலும் யோகாசனங்களிலும் கீழத்தேச நாகரிகத்திலும் மோகம்வந்துவிட்டதாம். உலகப் புகழ் வாய்ந்த சிதார் வித்வான் பண்டித ரவி சங்கரிடம் சிதார் பழகுவதென்று தீர்மானித்துக்கொண்டு 24 வயதுள்ள ஜோர்ஜ் பம்பாய் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருக்கிறார். கால்சட்டையையும் தொப்பியையும் 'தொண்டை சுருக்கி' யையும் இப்போதைக்கு கழற்றி சுவரில் தொங்க விட்டு விட்டு வட

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின் தங்கிய நாடுகளுக்கு தயங்காது உதவுகிறது

## அமெரிக்காவின் செல்வாக்கிற்கு எம்.பி. கூறும் காரணம்

உடுப்பிட்டி, ஞாயிறு

அமெரிக்கா பின்தங்கிய நாடுகளுக்கு தயங்காது உதவியளிப்பதின் மூலம் உலக அரங்கில் அதிக செல்வாக்கு பெற்று வருகிறது என்று சமீபத்தில் அமெரிக்கா சென்றுதிரும்பியஉடுப்பிட்டி எம். பி. திரு. சிவசிதம்பரம் வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவர் மன்ற கூட்டத்தில் பேசும் போது கூறினார்.

திரு. மு. சிவசிதம்பரம் எம். பி. மேலும் பேசுகையில் கூறியதாவது:

''சோவியத் ரஷ்யா, பிரான்ஸ் போன்ற வெளி நாடுகள் அமெரிக்காவைப் பின்பற்றியே முன்னேற்றம் அடைந்துள்ளன. அமெரிக்கா பின்தங்கிய நாடுகட்குத்தயங்காது உதவியளிப்பதன் மூலம் உலக அரங்கிலே அதிக செல்வாக்குப் பெற்றுள்ளது. அமெரிக்க அரசாங்கம் கல்வியைப் பெருக்கவும், வறுமையை ஒழிக்கவும் புதிய சட்டங்களை அமுல் நடத்தி வருகின்றது. அமெரிகா ஏழைகட்குப் போதிய வசதியை அளித்துள்ளது. அமெரிக்கா ஒரு சமஷ்டிநாடு அங்கே வெவ்வேறு மாவட்சபைகள் அமைந்துள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் இரு சபைகள் உண்டு. மாவட்டங்கள் ஒவ்வொன்றும் ஒரு ''கவர்னர்'' நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பகிரங்கத் தேர்தல் மூலம் பொதுமக்களால் தெரிவு செய்யப்படுவார். அமெரிக்கா முழுவதிற்கும் ஒரு மக்கள் சபையும், செனட் சபையும் உள்ளன. இச்சபைகளில் 4 ஆண்டுகள் ஒருவர் தொடர்ந்து அக்கிராசனராக இருந்தால் அவருக்குள்ள அதிகாரம் வேறு எவருக்கும் அமெரிக்காவில் கிடையாது. ஆறு வாரங்களில் அமெரிக்காவைப்பற்றி நன்கு அறிந்து கொள்ள முடியாது. எனது அமெரிக்க விஜயம் பயனுள்ளதாகவே அமைந்துள்ளது.

கூட்டத்திற்குக் கல்லூரி அதிபர். திரு. எம். என். சினித்தம்பி தலைமை வகித்தார்.

## இரண்டாம் எதிரி விடுதலை

மாவிட்டபுரம், சனி

கொலை முயற்சி வழக்கு ஒன்றில் இரண்டாம் எதிரி விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

குரும்பசிட்டியைச் சேர்ந்த கந்தன் வல்லி என்பவரைக் கட்டுவனைச் சேர்ந்த பழனி கந்தையா, குரும்பசிட்டியைச் சேர்ந்த வன்னியன் சுந்தரம் ஆகிய இருவரும் கத்தியால் வெட்டியும் பொல்லால் அடித்தும் கொலை செய்ய முயன்றதாக காங்கேசன்துறைப் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. டி. என். நித்தியகா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார். காங்கேசன்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. இராமநாதனின்உதவியுடன் திரு. எஸ். ஸ்ரீதரன் வழக்கை நடத்தினார்.

வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் நீதிபதியிடம் கூறியதாவது;

''இரண்டாம் எதிரி, காயக்காரருக்கு வடுவித்த காயங்கள் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடியது அல்ல. அவர் முதலாம் எதிரியை விடுவிக்கச் சென்றபோதே சிறு காயங்கள் ஏற்பட்டன. கொலைசெய்யும் நோக்கோடு இக்காயங்களை இரண்டாம் எதிரி ஏற்படுத்தவில்லை. கொலைசெய்ய முயன்றார் என்று இரண்டாம் எதிரி மீது குற்றம் நிரூபிக்கமுடியாது. எனவே இரண்டாவது எதிரியை விடுதலை செய்யவேண்டும்.''

நீதிபதி இதனை ஏற்றுக்கொண்டு இரண்டாம் எதிரியை விடுதலைசெய்து முதலாம் எதிரிக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டுமீதான விசாரணையை இம்மாதம் 23ந் தேதிவரை ஒத்திவைத்தார்.

## தேர்வுப் பரீட்சை ஏழைமக்களைப் பாதிக்கும்

### ஆங்கில தினசரி கண்டனம்

கொழும்பு, ஞாயிறு

கல்விவெள்ளை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் 8-ம் வகுப்பில் நடத்தப்படவிருக்கும் தேர்வுப் பரீட்சைமுறை கன்னங்கரா கமிட்டி 1943-ம் வருடம் சிபார்சுசெய்திருந்தபோதே அமுல் நடத்தப்பட்டிருந்தால் இப்போது இதால் நல்லபயனை அடைந்திருக்கலாம். இப்போது இத்திட்டத்தை அமுல் நடத்துவது மிகவும் காலதாமதமான தொரு காரியம்.'

இவ்வாறு ஆங்கில தினசரிப் பத்திரிகையான 'சன்' தனது 8-ம் திகதிய ஆசிரிய தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. தேர்வுப்பரீட்சையின்றி தமது பிள்ளைகள் பொதுத்தாரதரப்பத்திரம் பெறுவதை கிராமப்புற மக்கள் ஓர் உரிமையாக இதுவரைகாலமும் மேற்கொண்டுள்ளனர், இது கல்வியில் தமது பிள்ளைகளுக்குள்ள சமவாய்ப்பு எனவும் அவர்கள் கருதி வந்துள்ளார்கள். இது ஒரு கௌரவமாகவும் கருதப்பட்டுள்ளது. இதைத்தவிர தற்போது போதிய தொழிற்பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாததாலும் இத்திட்டத்தை திருப்திகரமாகக் கல்விப்பகுதியினர் அமுல் நடத்த முடியாது.

ஆரம்ப பாடசாலைகளில் கல்வித்துறையில் மாணவர்களுக்கு சமவாய்ப்பு அளித்தாலன்றி பொது மக்கள் இத்திட்டத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், இத்திட்டம் இப்போது அமுல் நடத்தப்படுவது ஏழைகளை மேலும் வருத்தி செல்வந்தர்களுக்கு அதிக இலாபம் தேடிக் கொடுப்பதாக விருக்கும்.

## போதனு மொழிபற்றி தமிழ் காங்கிரஸ் பிரமுகர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

''தமிழ்ப் பிள்ளைகளுக்கு மட்டுமல்ல முஸ்லிம் பிள்ளைகளுக்கும் தாய்மொழி தான் போதனுமொழியாக இருக்க வேண்டும். சிங்கள மாணவர்கள்தமிழ் மொழியை இரண்டாவதுமொழியாகக் கற்கும் பட்சத்தில் தமிழ் பேசும் மாணவர்களும், சிங்கள மொழியை இரண்டாவது மொழியாக கற்கலாம்''.

தமிழ்க்காங்கிரஸ் செயலாளர் திரு. மி. சங்கரப்பிள்ளை, போதனுமொழி சம்பந்தமாக நமது நிருபரிடம் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:

இலங்கையில் வாழும் எல்லா மாணவர்களுக்கும் தாய்மொழி தான் போதனுமொழியாக இருக்கவேண்டும். இதுபற்றி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் கமிட்டிக் கூட்டத்தில் நிச்சயம் முடிவு எடுப்போம்.

சிங்கள ஆசிரியர்களை வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பும் விஷயம் பற்றியும், கமிட்டிக் கூட்டத்தில் தான் தீர்மானிப்போம் இவ்விஷயங்களில் சீக்கிரம் தமிழ்க்காங்கிரஸின் கருத்தை தெரிவிக்குமாறு பல கிளைகள் கேட்டிருக்கின்றன. —

### சிவாஜி கலாமன்றம்

உடுப்பிட்டி, ஞாயிறு

வதிரி சிவாஜி கலாமன்ற வருடாந்தக்கூட்டம் திரு. கா. ஜெகதீசன் தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாகக் கீழ்க்காண்போர் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. கா. ஜெகதீசன், உபதலைவர்: திரு. கு. நவரத்தினம், செயலாளர்: க. நடராசா, பொருளாளர்: திரு. க. தவராசா.

## நாட்டிலும் நகரிலும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய பாணியில் தொள தொளவென்ற ஜிப்பாவையும் பிஜாமாவையும் சூடிக் கொண்டு இரு கால்களையும் மடித்து சப்பணம் கொட்டி உட்கார்ந்து சிதார் பழகுகிறார் ஓய்வு நேரங்களில் யோகாப்பியாசங்களையும் செய்து பார்க்கிறாராம்.

ஜாஸ், டப்பா, டுவிஸ்ட் என்ற வரிசையில் 'லாப்' சங்கீதம்தான் மிகப் பிரதியதும் மிகத் தீவிரமானதுமாகும். மோர் குழம்புக்கும் மாட்டு வால் சூப்புக்கும், எவ்வளவு தொடர்பு இருக்கிறதோ அவ்வளவுஒற்றுமை 'லாப்' சங்கீதத்துக்கும் இந்திய சாஸ்திர சங்கீதத்துக்கு மிடையில் இருக்கிறது ஸ்ரீமதி எம். எஸ். நமது சங்கீதத்தை மேறைடுகளில். பரப்புவதும் ஜோர்ஜ் ஹாரிஸன் ஸிதார் வாத்தியம் பழகுவதும் கிழக்கு - மேற்கு உறவுகளில் ஒரு புதியஉறவுபிறக்கிறதென்று அறிகுறியா?

— வழிப்போக்கன்

### இடமாற்றம்

சுழிபுரம், ஞாயிறு

ஆசிரியர் திரு. க. சினிவாசகம் தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர் மாங்குளம் [illegible] தமிழ்க்கலவன் பாடசாலையில் கடமையாற்றியுள்ளார்.

## 'வேதாகமங்களை அறியாதோர் பிரச்னை கிளப்புகின்றனர்'

### தர்மகர்த்தாக்கள் கூட்டத்தில் பேச்சு

மாவிட்டபுரம், ஞாயிறு

''சைவத்துக்கு உயர் அதிகார பீடம் இல்லாத குறை விரைவில் போக்கப்பட வேண்டும். உயர் பீடம் இல்லாதது தான் பல முரணான கருத்துக்கள் ஏற்படக்காரணம் என்று திரு. மு, வைத்திலிங்கம் அகில இலங்கை தர்மகர்த்தாக்கள் சபைக் கூட்டத்தில் பேசும் போது குறிப்பிட்டார்.

அகில இலங்கை தர்மகர்த்தாக்கள் சபையின்விசேஷ கூட்டம் கீரிமலை சிருப்பர் மடத்தில் பிரமஸ்ரீ சு. துரைசாமிக்குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

பிரமஸ்ரீ சு. துரைசாமிக் குருக்கள் தமது தலைமையில் குறிப்பிட்டதாவது:

சைவக் கோவில்களுக்கு சைவசமயக் கோட்பாடுகளை அனுட்டித்து வாழும் சைவ மக்களுக்கும் தகுந்தமுறையில் சட்டங்கள் இருக்கின்றன. இச்சட்டங்கள் ஆதி முத்தரும் தனக்குவமை இல்லாதவருமாகிய சிவபெருமானல் ஆக்கப்பட்டவை. அவைவேத சிவாகமங்களே. இச்சட்டங்கள் மிகுந்தசக்தி உடையனவாக இருக்கின்றன. இதனுல்தான் உலகம் தோன்றிய காலம்தொட்டு அழியாமல் போற்றப்படுகின்றன.

பிரமஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள் பேசிதாவது:-

வேதங்கள் ஆகமங்களை அறியாததால் சில பிரச்சனைகளை கிளப்புகின்றனர். அவற்றை அறியவிரும்புவோர்கள் தக்ககுருமாரிடம் சென்று கற்று அறிந்தபின்னரே அதைப்பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கவேண்டும். 'வர்ணாச்சிரம தர்மத்துக்கும் சைவ அடிப்படைக்கும் சமத்துவம் விரோதமானது. ஆனல் அரசியல் தந்திரமாகவே இதனை கையாளுகிறேன்.' என்று காந்தி அடிகள் பிரமஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளுக்கு கடிதம் எழுதிஇருப்பதனை அரசியல் வாதிகள் சிந்திக்கவேண்டும்

திரு. வி. நடராசா பேசியதாவது!

இந்தியாவிலே சாதி பேதத்தை ஒரு தேசவழமை என்றும் இதனை நாம் காலப்போக்கில் மாற்றவேண்டும் என்றும் சட்டம் கொண்டு வந்தார்கள். ஆனல் இது தேசவழமையல்ல. ஆகமம் விதித்ததே தவிர அல்லாமல் வேறு மனிதர்கள் விதித்தது அல்ல. அப்படியாயின் அவை எப்பவோ அழிந்து இருக்கும்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

வேதங்களும், ஆகமங்களும் வருணாச்சிரமதர்மங்களை எடுத்துக்காட்டுகின்றன. அதனல் ஒவ்வொரு சைவனும் விதிக்கப்பட்டபடியே நின்று சந்நிதானங்களில் வழிபடக்கடவர்.

சைவக்கோவில்களில் சுவாமி தரிசனம் செய்யவேண்டிய விதிமுறைகளை ஆகம நூலில் கூறும் விதிப்படி மக்கள் அறியச்செய்யவேண்டும். இவற்றை துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவோ அல்லது சிறுபுத்தகங்கள் வடிவிலோ அச்சிட்டு இச்சபை வெளியிடவேண்டும்.

சைவக் குருமார்களுக்கும் போக்குவரத்து வாகனங்களில் ஆசனங்கள் ஒதுக்கப்படவேண்டும். அவற்றை அவர்கள் உபயோகிக்கக் கூடிய வசதியை இலங்கைப் போக்குவரத்துச்சபை செய்துதரவேண்டும்.

நீண்டகாலமாக சைவத்திற்குத் தொண்டு செய்தும் உண்மைச் சைவனுக வாழ்ந்த உத்தமர் அராலி வ. கந்தையாவின் மரணம் குறித்து, அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

## சந்தேகத்தின் மீது இருவருக்கு 'ரிமாண்ட்'

சாவகச்சேரி, ஞாயிறு

பரந்தனில் வசிப்பவர்களெனக்கருதப்படும் கே. சுப்பிரமணியம், கே. ஆறுமுகம் ஆகிய இருவரையும் சாவகச்சேரிப் பொலிசைச் சேர்ந்த சார்ஜன்ட் ரீ. செல்லையா, கான்ஸ்டபிள் கனகசபைஆகிய இருவரும் சந்தேகத்தின்பேரில் கைது செய்து விசாரித்தபோது அவர்கள் தகுந்த பதிலளிக்காமையால் நாலாம் திகதி சாவகச்சேரி பதில் மாஜிஸ்திரேட் திரு. எஸ் கே. திரவியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்தபோது அவர் நேற்று வரை அவ்விரு சந்தேக நபர்களையும் ரிமாண்டிலிருக்கும்படி கட்டளையிட்டார்.

நேற்று மாஜிஸ்திரேட் திரு ரூபேட் சில்வா அவ்விருவரையும் ரூபா 500 பிணையில் செல்ல அனுமதித்த போது எவரும் பிணை எடுக்காததால் தொடர்ந்து விளக்கமறியலில் இருக்கும்படி கூறி விசாரணையை இம்மாதம் பத்தாம் திகதிவரை ஒத்திவைத்தார். அவ்விரு நபர்களின் கைவிடையாளங்களை பரிசோதனைக்காக கொழும்பிற்கு அனுப்பியுள்ளனர்.

## ரஷ்யா..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சுமார் 50 லட்சம் பெறுமதியான 1,50,000 சப்பாத்துக்களை இப்போது ரஷ்யா வாங்கிக் கொள்ளவிருக்கின்றது. முதல் பகுதி டிசம்பர் மாதம் 10-ந் திகதி ரஷ்யாவுக்கு ஏற்றுமதியாகும்.

இந்த ஏற்பாட்டினுல் உள்ளூர் சப்பாத்து உற்பத்தியாளர்கள் பெரிதும் பயன் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## கடந்த தேர்தல் பற்றிய அறிக்கை

கொழும்பு, ஞாயிறு

கடந்த வருடம் மார்ச் மாதம்நடைபெற்றபொதுத் தேர்தலில் 81-2.விதம்வாக்காளர்வாக்களித்துள்ளனர். இலங்கைப்பாராளுமன்றத் தேர்தல்களில் இதுவே ஆகக் கூடிய வாக்காளர் விகிதமாகும்.

பொதுத் தேர்தல் அமைதியாக நடந்ததெனவும், இதற்கு அரசியல் கட்சிகள், அபேடசகர்கள், பொதுமக்களது ஒத்துழைப்புப் பெரிதும் உதவியாக அமைந்ததெனவும் தேர்தல் கமிசனர் வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கட்சிக் கொடிகள், ஊர்வலங்கள், கூட்டங்கள் ஆகியவற்றுக்கு தேர்தல் நிலையங்களிலிருந்து குறிப்பிட்ட எல்லைக்குள் தடை விதிக்கப் பட்டிருந்தது. தேர்தல் அமைதியாக நடக்க மற்றுமோர் காரணமென்றும் அவ்வறிக்கை மேலும் கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகங்களில் நகைச்சுவை

—ஜோன் செல்வராசா—

"சிரிப்பு மனிதனுக்குக் கிடைக்கும் ஓர் அரிய மருந்து" என ஒரு பழமொழியுண்டு. 'நீ உன் வாழ்நாளில் ஒரு முறையேனும் சிரித்து விடு. ஒருவேளை நீ சிரிக்காமலே இறந்துவிட நேரிடலாம்" எனச் சிரிப்பு டாக்டர் கலைவாணர் ஒருமுறை கூறினார். சிரிப்பு இருக்கும் இடத்தில் டாக்டருக்கு வேலை இருக்கமுடியாது.

தற்காலத்தே தமிழ் நாடகங்களிலும், சினிமாவிலும் நகைச்சுவைக் காட்சிகள் என்ற பெயரால் பெரும் பகுதி நேரங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. முற்காலத்தே நாடகங்கள் இசை முறைப்படி நடாத்தப்பட்டமையால் மக்கள் 'விடிய' 'விடிய' இசையை ரசித்து இருக்கக்கூடியதாக இருந்தது. ஆனால் தற்காலத்தே நாடகங்களின் போக்குமாறிவிட்டது. நாடகங்கள் முழுதும் வசன மயமாகவே உள்ளன. (இடையிடையே இசையென்ற பெயரால் முழங்கப்படும் டப்பாச் சங்கீதங்களைக்கேட்க இமாலயப் பொறுமை வேண்டும்) எனவேதான் மக்களுக்கு வசனநாடகங்களில் அலுப்புத்தட்டாமலிருக்க நகைச்சுவைக் காட்சிகள் மிகவும் அவசியம் தேவைப்படுகின்றன.

நம்நாட்டிலேநகைச்சுவைகள் எவ்வாறான போக்கிலே வளருகின்றன என ஆராய்ந்தால் இரண்டு விதமாகப் பிரித்துக் கூறநாம். ஒன்று மண்வாசனையோடு கூடிய கிராமிய சம்பாஷணைகள் பொதுவாக யாழ்ப்பாணப் பகுதி நாடகங்களிலே ஆரம்பகாலந்தொட்டு இற்றைவரை வருகின்ற தரகர், வியாபாரி, கமக்காரன் என்றிவ்வாறான பாத்திரங்கள் கிராமிய நகைச்சுவைப்பேச்சுக்களை இத்தனை ஆண்டுகளாகப் பேசியும் மக்களுக்குச் சலிப்புத் தட்டவில்லை. இதன்காரணம் சம்பாஷணைகள் எல்லாம்இயற்கையோடு ஒட்டியிருப்பதே. பழைய பேச்சுக்களைப்புதியபுதியஉத்திகள் மூலம் பேசினாலும் மக்கள்விழுந்தடித்துக்கொண்டு பார்ப்பதன் இரகசியம் நம்களோடு ஊறிப்போன இயற்கையான பேச்சுக்களின் ரசனைத்தன்மையே. சக்கடத்தாரும், உடையார், விதானையும், நாட்டானும், புகையிலை வியாபாரியும் மக்கள் மத்தியில் மவுசு குறையாமல் சிரஞ்சிவியாக இருப்பதன் காரணமும் இதுவே.

இரண்டாவது, நகைச்சுவை சமூக சீர்திருத்தம் என்ற பெயரால் தமக்கு வேண்டாதவர்களையெல்லாம் வைது தீர்ப்பது உதாரணமாகப்பெண்களைக் கோணம் கோணமாக மேடையில் வைத்து விமர்சிப்பது மிகவும் கேவலமானதொரு செயலாகும். கௌரவர்கள் பாஞ்சாலியை சபையில் வைத்துத் துகிலுரிந்தது எவ்வாறானதோ அவ்வாறனதே, தாய்க்குலத்தை மேடைகளில் வைத்து அங்கமங்கமாக விமர்சனம் செய்வதும், அதுமட்டுமின்றி குடித்துவிட்டு அப்பனும் மகனும் சேர்ந்து கூத்தாடுவது, மனைவியும் கணவனும் கும்மாளமடிப்பது இவையெல்லாம் சமுதாயத்தைக் கெடுக்கின்ற நகைச்சுவைகளாகும். இவைபோன்ற நகைச்சுவைக்காட்சிகள் நம் நாட்டின் பண்பாட்டிற் கொவ்வாததுடன்வருகின்ற சந்ததியினரையும் பாழடித்துவிடுமென்பது நிச்சயம்.

எனவே நாடக நடிகர்கள் மிகவும் பொறுப்புணர்ச்சியுடனும் புனிதத்தன்மையுடனும் மேடையேறுவதுடன், பண்பாடான வார்த்தைகளால் சமுதாயத்துக்கு நல்லறிவு புகட்டும் வார்த்தைகளைப் பேசுவது நாட்டிற்கும் நாடகக்கலைக்கும் மிகவும் ஏற்புடையதாகும்.

# திரு-விளக்கம்

வள்ளுவர் பலர். திரு சேர்ந்த வள்ளுவர் ஒருவர். குறள் பல. ஆனால் திருசேர்ந்த குறள் ஒன்றுதான் உண்டு.

திரு அடைமொழியாகச் சேர்ந்து தனிச்சிறப்பை அளிக்கின்ற பெயர்கள் தமிழ் நாட்டிலே பல உள. பல கோவைகள் உண்டு நூல்களிலே. திரு சேர்ந்த கோவை ஒன்றே ஒன்றுதான் அது திருக்கோவை:

பதிகள் பல உண்டு தமிழ்நாட்டிலே. ஆனால் திரு சேர்ந்த பதி திருப்பதி ஒன்றுதான்.

வாசகம் பல. ஆனால், திரு சேர்ந்த வாசகம் ஒன்றே ஒன்று. அது திருவாசகம்.

வள்ளுவர் என்று சாதியாலும் பெயராலும் பலர் இருந்தார்கள். வள்ளுவர் என்றால் பலரைக் குறிக்கும். திரு சேர்ந்த அந்தப் பெயருக்கு உரியவர் ஒருவர்தான். திரு தனிச் சிறப்பை உடையது. அதைப்பெற்ற வள்ளுவர் திருவள்ளுவர்.

விளக்கியவர்:
திரு. இ. ஆ. பெ. விசுவநாதம்.

# மான்களிடம் சிக்கிய புலி

காலஞ்சென்ற பிரபல தென்னிந்திய கம்யூனிஸ்ட் தலைவர் திரு. ப. ஜீவானந்தம் ஒருதடவை ரஷ்யாவுக்கு போயிருந்தார். அங்கே அவர் பல இடங்களை சுற்றிப்பார்த்து விட்டு லெனின்கிராட் நகரத்துக்குப் போனார். அங்குள்ள ஆசிரியப் பெண்மணிகள் அவரை ஒரு விருந்துக்கு வரும்படி அழைத்தனர். விருந்து முடிந்ததும் மேனாட்டு முறைப்படி 'போல் ரூம் டான்ஸ்' ஆடவேண்டிவந்தது. ஜீவாவுக்கு அடித்துப் போட்டு கட்டுவைத்தாலும் ஆட்டம் வராது. எவ்வளவோ சொல்லி மறுத்துப் பார்த்தார். ஆசிரியப்பெண்கள் விட்டபாடில்லை.

வேறு வழியில்லாமல் ஜீவா ஆடுவதற்கு ஒப்புக்கொண்டார். மான் கூட்டத்தில் நடுவே சிக்கிய வேங்கைப்புலி போல ஜீவானந்தம் நடனமாடினார். முன்பின் பழக்கமில்லாததால் கைகளையும் கால்களையும் இப்படியும் அப்படியும் வீசி விளாசினார். சுற்றி வந்து கரணம் போட்டார். இந்த அமளியில் அவருடைய கால்களில் மாட்டப்பட்டிருந்த செருப்புகள் மூலைக்கு ஒன்றாகப்பறந்தன.

ஆசிரியப் பெண்கள் அப்படியும் அவரை விடவில்லை, சரியாக ஒன்றரை மணி நேரம் ஆடிக்களைத்த பின்புதான் அவருக்கு விடுதலை கொடுத்தார்கள்.

## நீர்ப்பாசன இலாகாவின் 200 திட்டங்கள்

கொழும்பு, ஞாயிறு
மத்திய நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் நீர்பாசன இலாகா 200 சிறு நீர்ப்பாசன திட்டங்களை அமுல் நடாத்தத் தீர்மானித்துள்ளது.

இந்நீர்ப்பாசன திட்டங்களின் கீழ் நீர் பாய்ச்சக்கூடிய 41,000 ஏக்கர் நிலமும், 19,000 மேட்டு நிலமும், 16.000 ஏக்கர் முடிக்குரியகாணி மற்றும் தனிப்பட்ட காணியும் விவசாயத்தில் ஈடுபடுத்தப்படும்.

வட மாகாணத்தில் உள்ள விலவமடுவுக்கருகாமையில் உள்ள1200ஏக்கர்காணி,உப உணவு உற்பத்தி செய்வதற்காக இந்நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும். மேலும் நீர்ப்பாய்ச்சுதற்கு ஏதுவான காணிகளை கண்டுபிடிப்பதற்காக நிலப் பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

## கார்மோதியதால் படுகாயம்

சங்கானை, ஞாயிறு
சங்கானையைச் சேர்ந்த தில்லையம்பலம் அப்பாக்குட்டி என்பவர் மோட்டார் வண்டிமோதி படுகாயமடைந்தார். சங்கானைப் பொலிசார் ஸ்தலத்திற்கு வந்து காயமடைந்தவரை உடனடியாக ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தனர். மோட்டார் வண்டி, பரிசோதனைக்காக பொலிஸ்நிலையத்திற்கு எடுத்து செல்லப்பட்டது.

இந்த சம்பவம் சங்கானை சந்தைக்கருகாமையில் நிகழ்ந்தது.

## சுற்றுப் பயணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி விஞ்ஞான மாணவர்களில் முப்பத்தைந்து பேரும் ஆசிரியர்கள்மூவரும் தாவர இயல் சம்பந்தமான உண்மைகளையறிய இலங்கைச்சுற்றுப்பயணம்ஒன்றை இன்று மேற்கொண்டுள்ளனர்.

இக்குழுவினர்கண்டிபேராதனைப்பூந்தோட்டம், நுவரெலியா ககலாசர்டின் ஆகிய இடங்களைப் பார்வையிடுவதோடு, தேயிலைத்தோட்டங்கள் சிலவற்றைப் பார்வையிடவும் திட்டமிட்டுள்ளனர்.

## மஹியங்கன புனித நகராகும்

கொழும்பு, ஞாயிறு
மஹியங்கனவை பௌத்த புனித நகராக்குவதெனஉள்ளூராட்சி அமைச்சு தீர்மானித்துள்ளது. இத்திட்டத்துக்காகப்பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கப்படுமெனத் தெரிகிறது.

## கூட்டுறவுக் கருத்தரங்கம்

கிளிநொச்சி, சனி
யாழ் தெற்கு உதவிக் கூட்டுறவு ஆணையாளரின் ஆதரவில் இம்மாதம் 22-ந்திகதி கிளிநொச்சி ஈஸ்வரன் படமாளிகையில் கூட்டுறவுக்கருத்தரங்கு ஒன்றை நடாத்த ஏற்பாடாகியுள்ளது. இக் கருத்தரங்குக்கு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு: வேர்ணன், அபயசேகரா தலைமை தாங்குவார். மற்றும் உதவி அரசாங்க அதிபர் உட்படப்பலர் பேசுவர்.

ந்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# பஞ்சாமிர்தம்

தயாரிப்பு:- வி. என். பி.

# அண்ட வெளியில் இன்னொரு பூமி

பால் வழி என்பது ஆகாயத்தில் தென்கிழக்கு—வடமேற்காகத் தோற்றும் ஒரு மங்கல் வெள்ளை நிறமான கீறல். இதில் தனித்தனி அண்டங்கள் ஆயிரக்கணக்கில் உண்டு. நமது சூரிய மண்டலமும் அதில் ஒரு பகுதி என்றால் பலருக்கு ஆச்சரியமாயிருக்கலாம் — ஆனால் உண்மை. நமது சூரியனைச் சுற்றி புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய், வியாழன், சனி முதலிய கிரகங்கள் வலம் வருவது போல இந்த பால் வழியிலும் பல கிரகங்களும் கோள்களும் வால் நட்சத்திரங்களும் பல சூரியர்களை சுற்றி வலம் வந்துகொண்டிருக்கின்றன.

இந்த பால் வழியை ஒரு 'கலக்ஸி' அல்லது மண்டலக் கூட்டம் என்று வைத்துக் கொண்டால் இது போன்ற நூற்றுக்கணக்கான 'கலக்ஸி'கள் வான வெளியில் இருக்கின்றன. இவற்றில் சில மிகவும் சக்திவாய்ந்த பூதக் கண்ணாடிகள் மூலம் பார்க்கக்கூடியனவாயிருக்கின்றன. பூதக் கண்ணாடிக்கு அகப்படாமல் எத்தனை எத்தனை 'கலக்ஸி'கள் இருக்கின்றனவோ ஆண்டவன் ஒருவனுக்குத்தான் வெளிச்சம்.

நமது சூரிய மண்டலத்திலுள்ள கிரகங்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்டவை என்பது எல்லோரும் அறிந்த விஷயம், பூமியிலுள்ள வாயுக்களும் உலோகங்களும் மற்றும் திரவதிடப் பொருட்கள் புதன், சுக்கிரன் முதலியவற்றில் கிடையாது. ஆகையினால்தான் மனிதனைப் போன்ற ஜந்துகள் அங்கு வாழமுடியாது என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஆனால் நமது சூரிய மண்டலத்தைப்போல இந்த பரந்த அண்டவெளியில் பல நூறாயிரம் மண்டலங்கள் இருக்கும் பட்சத்தில் அவற்றில் ஒன்று எமது மண்டலத்தை ஒத்திருக்கக் கூடிய ஒருசந்தர்ப்பம் இருக்கும்ல்லவா. ஆயிரம் ஆயிரம் ஒளி வருடங்களுக்கப்பால் இப்படிப்பட்ட ஒரு மண்டலம் இருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். அப்படியானால் அங்கேயும் நமது சூரியனைப் போல ஒரு சூரியன், நமது பூமியைப் போல ஒரு பூமி, நமது சந்திரனைப்போல ஒரு சந்திரன், நமது பூமியிலுள்ள சுவாத்தியம் போன்ற ஒரு சுவாத்தியம், நம்மைப் போன்ற மனிதர்கள்—எல்லாம் இருக்கக் கூடுமல்லவா!

நமது ஐம்புலன்களுக்கும் எட்டாத ஒரு கற்பனை இது. ஆயினும் தர்க்க சாஸ்திரத்தின் பிரகாரம் இதை முற்றிலும் மறுத்து தட்டிக் கழிக்க முடியாது.

எட்கார் வாலஸ் என்ற பெயர்போன ஆங்கில நாவலாசிரியர் 'பிளாவட் 27' என்ற தமது நாவலில் இம் [illegible] ஒரு கற்பனை [illegible] பூமியிலுள்ள ஒரு விஞ்ஞானி இந்த கற்பனை உண்மையாயிருக்கத்தான் வேண்டும் என்று நம்பி, நமது பூமியைப் போல இன்னுமொரு பூமி இருக்கும் பட்சத்தில் அங்கே நமது பெயருள்ள இன்னொரு விஞ்ஞானி இருக்கத்தான் வேண்டுமென்று வாதாடி, நுட்பமானதோர் அதிசய யந்திரக் கருவியைப்படைந்து அதன் மூலம் அந்த மற்றப் பூமியில் தம்மைப் போலவே தமது பெயருள்ள அந்த விஞ்ஞானியுடன் தொடர்புவைத்துக் கொண்டதாக அந்த நாவல் கற்பனை செய்கிறது.

எவ்வளவு ஓர் ஆனந்தமான கற்பனை இது! நமது பூமி போன்ற இன்னொரு பூமி. அதில் நம்மைப் போன்ற மனிதர்கள், காற்று, தண்ணீர், கடல், மேகம், மழை. அத்துடன்

(2-ம் கலம் பார்க்க)

(4-ம் கலத் தொடர்ச்சி)

நின்றுவிடாமல் இங்குள்ள ஒவ்வொரு மனிதரையும் அச்சோட்டாக நிகர்த்த அதே வடிவம், குணம் முதலியனவுள்ள மனிதர்கள். இங்குள்ள ஒருவருக்கு நிகழ்வதெல்லாம் அதே சமயம் அங்குள்ள அவருடைய பிரதிக்கும நிகழ்வது—என்றெல்லாம் கற்பனைசெய்து கொண்டுபோகலாமல்லவா?

ஆஹா, அந்தமற்ற பூமியை நாம் கண்டுபிடிக்க முடியுமாயிருந்தால்......?

---

கொழும்புத்துறை யோகசுவாமிகள் கீர்த்தனை ரூபத்தில் பல பாடல்களை இயற்றியிருக்கிறார் என்பது பலருக்குத் தெரியாத விஷயம். அவற்றுள் ஒன்று இங்கே தரப்படுகிறது.

ராகம்-தன்யாசி தாளம்-ஆதி

**பல்லவி**

ஆண்டவன் திருவடி வேண்டிக் கொண்டாலென்றும்
ஆறுதல் உண்டாகும். (ஆண்)

**அனுபல்லவி**

காண்பதெல்லாம் நிலை அன்றெனக் காட்டும்
காயத்தை வெல்லும் உபாயத்தை ஊட்டும் (ஆண்)

**சரணம்**

சுவாமி யோகநாதன் சொல்லிய பாட்டு
சுந்தரமான வழிதனைக் காட்டும்
ஆவியுள்ளளவும் அமுதத்தை யூட்டும்
ஆகம்பிர மாஸ்மி யென முடி சூட்டும் (ஆண்)

## சுகாதார இலாகாவின் பால் பரிசோதனை

கொழும்பு, ஞாயிறு
ஆஸ்பத்திரிகளுக்கு அளிக்கப்படும் பாலின் தரத்தைப் பரிசோதித்தபின்னரேபெறுமாறு நாட்டிலுள்ள ஆஸ்பத்திரி மற்றும் வைத்திய நிலையங்களின் நிர்வாகிகளைச் சுகாதார இலாகா கேட்டுள்ளது.

மாதம் இருமுறையாவது இந்நிலையங்கள் தாம்பெறும் பாலின் தரத்தை சுகாதார இலாகாவின் பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்களினால்பரிசோதனை செய்து பார்க்க வேண்டுமெனச் சுகாதார இலாகா கூறியுள்ளது.

ஆஸ்பத்திரிகள், வைத்திய நிலையங்களில்உபயோகிக்கப்படும் பாலின் தரம்சுகாதார இலாகா விதித்துள்ள தரத்திலிருந்து குறைந்ததாகக் காணப்படுவதைத் தொடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகள் விளையாட்டு சங்க 2;3-ம் பிரிவு

# உதைபந்தாட்ட போட்டிகள்

## யூனியன் கல்லூரிக்கு அபார வெற்றி

யாழ்ப்பாணம், சனி

யாழ். விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவிலான 2-ம் 3-ம் பிரிவுகளுக்கிடையேயான உதைபந்தாட்டப் போட்டிகளில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்துக்கும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற இரு போட்டிகளிலும் தலா 6; 0; கோல்களால் கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தை யூனியன் கல்லூரி தோற்கடித்தது. முதலில் நடைபெற்ற 3-ம் பிரிவுப் போட்டி ஆரம்பத்தில் 'மட்ட'ரமாக இருந்தபோதும் யூனியன்கல்லூரி சூட்டோடு சூடாக கோல்கள் போட்டுக் கொண்டேயிருந்தது. இடைவேளையின் பின்னர் போட்டியின் தரம் உயர்வாகக்காணப்பட்டது. எனினும் கோல்கள் போடும் விஷயத்தில் கனகரெத்தினம் கோஷ்டி பின்தங்கியே இருந்தது இப்போட்டிமுடிவில் யூனியன் கல்லூரி கனகரெத்தினம்மத்திய மகாவித்தியாலயத்தை 6—0 கோல்களால் தோற்கடித்தது.

இதையடுத்து நடைபெற்ற 2-ம் பிரிவுக்கான போட்டியில் யூனியன் கல்லூரியின் விளையாட்டு பாராட்டுக்குரியது. அவர்களின் சிறந்த 'பாசிங்' விளையாட்டு எதிர்க்கோஷ்டியைத் திணறடித்தது. எனினும் கனகரெத்தினம் கோஷ்டியினர் தமது முழுப்பலத்தையும் பிரயோகித்து பலமாக மோதினர். எனினும் யூனியன் வீரர்கள் அடுத்தடுத்து கோல்கள் போட்டுக்கொண்டேயிருந்தனர் இடைவேளையின்போது எதிர்க்கோஷ்டியினர் ஒரு கோலும் போடாதவகையில் யூனியன் 3கோல்கள் போட்டிருந்தது. இடைவேளைக்குப்பின்னர் போட்டி ரசிப்பாகக்காணப்பட்டது. எனினும் கனகரெத்தினம் கோஷ்டியினர் கோல்கள் போடும் முயற்சிகளில் பல தடவைகள் தோல்வியடைந்து கொண்டேயிருந்தனர். யூனியன் வீரர்கள் மேலும் 3 கோல்களை அடுத்தடுத்து உதைத்தனர். இப்போட்டி முடிவிலும் யூனியன் வீரர்கள் கனகரெத்தினம் கோஷ்டியை 6—0 கோல்களால் தோற்கடித்தனர். இவ்விரு போட்டிகளும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

### அருணோதயா வெற்றி

யாழ். மத்திய கல்லூரிக்கும் அருணோதயாக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற 3-ம் பிரிவுப்போட்டியில் கடுமையான போட்டியின் பின்னர் அருணோதயாக் கல்லூரி மத்திய கல்லூரியைத் தோற்கடித்தது. இடைவேளைக்கு முன்னர் நடந்தபோட்டியில் அருணோதயா 2 கோல்கள் அடித்திருக்கத்தக்கதாக மத்திய கல்லூரி ஒரு கோல் பெற்றிருந்தது. இடைவேளைக்குப் பின்னர் நடந்த போட்டி மிகவும் ரசிப்பாகக்காணப்பட்டது. இருசாராருமே விட்டுக்கொடுக்காமல் பலமாக மோதினர். இதன்பயனாக மத்திய கல்லூரியின் முன்னணி வீரரான பீற்றபோல் மின்னல் வேகத்தில் ஒரு கோலை உதைத்தார். எனினும் அருணோதயாவிடாது கடுமையாகப் போட்டியிட்டது. எதிர்பாராதவிதமாக அருணோதயாவுக்கு ஒரு 'பெனல்டி' கிடைத்தது. இதைப் பயன்படுத்தி அருணோதயா மேலும் ஒரு கோல் பெற்றுக் கொண்டது. இப்போட்டி முடிவில் அருணோதயாக் கல்லூரி 3—2 கோல்களால் மத்திய கல்லூரியைத் தோற்கடித்தது.

### வெற்றி தோல்வியில்லை

3-ம் பிரிவுப் போட்டியை அடுத்து இரு கல்லூரிகளுக்கும் இடையேயான 2-ம்பிரிவுப் போட்டி ஆரம்பமானது. இப்போட்டி ஆரம்பத்தில் இருந்து முடிவுவரையும் விறுவிறுப்பாகவும் ரசிப்பாகவும் காணப்பட்டது. இரு கோஷ்டியும் பலமாக மோதின. கோல்கள் போடுவதற்கு அருணோதயா பலமுறை முயற்சித்தது. இச்சந்தர்ப்பங்களில் மத்திய கல்லூரியின் கோல்காப்பாளரின் விளையாட்டு பாராட்டக்கூடியது. இடைவேளையின்போது ஒருவருமே கோல்கள் போடவில்லை. இடைவேளைக்குப் பின் போட்டியின்தரம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. இடைவேளை ஆரம்பமான ஒருசில விநாடிகளில் அருணோதயா வெற்றிகரமான தனது முதலாவது கோலை உதைத்துத் தள்ளியது. இதை இக்கோஷ்டியின் முன்னணி வீரரான தவராசா அடித்திருந்தார். இதையடுத்து மத்திய கல்லூரியின் முன்னணி வீரரான நடராசா ஒரு கோலை மின்னல் வேகத்தில் அற்புதமாக உதைத்துப் பெற்றார். இந்நிகழ்ச்சிகள் ரசிகர்களுக்கு ஒரு புது ரசிப்புத்தன்மையை உண்டாக்கியது குறிப்பிடத்தக்கது. மேலும் கோல்கள் போடுவதற்கு இரு கோஷ்டியினரும் பெரு முயற்சிகள் எடுத்தனர். எதிர்பாராதவிதமாக அருணோதயாவுக்கு ஒரு 'பெனல்டி' கிடைத்தது. மத்திய கல்லூரியின் கோல்காப்பாளரின் திறமையினால் இப் 'பெனல்டி' முறியடிக்கப்பட்டது. இப்போட்டி முடிவில் இரு கோஷ்டிகளும் தலா 1—1 கோல்கள் பெற்று வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகளுக்கு திரு. சந்திங்கராயர் மத்தியஸ்தம் வகித்தார்.

### 2-ம் பிரிவு ஸ்கந்தா வெற்றி

மேற்படி கல்லூரிகளின் இரண்டாம் பிரிவு ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி வீரர்கள் 3 கோல்களைப் போட்டு வெற்றி பெற்றனர். யாழ்ப்பாணக் கல்லூரியினர் இரண்டு கோல்களை மட்டும் போட்டனர்.

### யாழ்ப்பாண கல்லூரிக்கு வெற்றி

சுழிபுரம், ஞாயிறு

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி முதலாம் பிரிவுக் கோஷ்டிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முதலாம் பிரிவுக் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரியினர் 5-1 கோல்களால் அமோக வெற்றி பெற்றனர். போட்டி யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு மைதானத்தி நடை...

### விறுவிறுப்பாக நடந்த போட்டி

நல்லூர், சனி

பரமேஸ்வராக்கல்லூரிக்கும் காரைநகர் இந்துக்கல்லூரிக்கும் இடையே நடை நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டி பரமேஸ்வராக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் 3-ம் பிரிவு போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் இரு பகுதி விளையாட்டு வீரர்களும் பெரும் திறமையுடன் மோதினர். எனினும் ஆட்டம் தொடங்கி 10 நிமிடத்துக்குள் எஸ். தேவதவஞானம் என்னும் பரமேஸ்வரா வீரர் தமது திறமையால் ஒரு கோல் போட்டார். அத்துடன் விளையாட்டு மேலும் வெகு சுறுசுறுப்பைப் பெற்றது. பின்னர் எம். சந்திரசேன ஒரு கோலை போட்டு வெற்றியை வலப்படுத்தினர். அதை அடுத்து ரி. மனோகரன் ஒரு கோலைப் போட்டார். இடைவேளையின் பின்னர் எவரும் ஒரு கோலும் போட முடியாதிருந்தது திரு. எஸ். சிவலிங்கம் இப்போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தார்.

பின்னர் இரண்டாம் பகுதியினருக்கான போட்டி ஆரம்பமாயிற்று. இதிலும் பரமேஸ்வராக்கல்லூரி நான்கு கோல்களைப் போட்டு பெரு வெற்றி எய்தியது.

ஆட்டம் தொடங்கி ஐந்து நிமிடத்தில் முதல் கோல் பரமேஸ்வராக் கல்லூரி வீரர் முருகேந்திரன் போட்டார். அத்துடன் விளையாட்டு சோபை அற்று இருந்தது. பின்னர் இடது புற முன்னணி வீரர் இரகுநாதன் ஒரு கோல் போட்டார். அதன் பின்னர் காரைநகர் வீரர்கள் வெகு உற்சாகத்துடன் விளையாடினர். மின்னல் வேகத்தில் பந்துகளைக் கொண்டு வந்து கொண்டே இருந்தனர். பரமேஸ்வராக் காப்டன் சிவசுப்பிரமணியத்தின் திறமையால் அவையாவும் திருப்பி அனுப்பப்பட்டுக் கொண்டே இருந்தது. பரமேஸ்வராக் கல்லூரிக் கோல் காப்பாளர் அரியநேசன் பந்துகளைப் பிடித்துக்கொண்டே இருந்தார். இந்நிலையில் பரமேஸ்வரா முன்னணி வீரர் விக்னேஸ்வரன் ஒரு கோலை சுலபமாக உள்ளே தள்ளினார். இடைவேளையின் பின் போட்டி உச்சக்கட்டத்தை அடைந்தது. இரு பகுதியினரும் வலுவாக மோதினர். காரைநகர் வீரர்களின் தாக்குதல்களுக்கு சுப்பிரமணியம் பதில் அடி கொடுத்துக்கொண்டே இருந்தார். இந்நிலையில் விக்னேஸ்வரன் பின்னும் ஒரு கோலைப் போட்டார். பின்னும் ஆட்டம் சுறுசுறுப்பாக காணப்பட்டதெனினும் எவரும் ஒரு கோலும் போட முடியாமல் இருந்தது. இவ்விளையாட்டு பரமேஸ்வராக் கல்லூரிக்கான முதல் போட்டி என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாட்டத்திற்கு திரு. ...

### பரமேஸ்வராக் கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள்

பரமேஸ்வராக் கல்லூரிக்கும், தெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திற்கும் இடையே 3-வது பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டி பரமேஸ்வராக்கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்றது. இப்போட்டி தொடக்கத்தில் இருந்து முடிவுவரை பெரும் உற்சாகத்துடன் நடைபெற்றது ஆட்டம் தொடங்கி முதல் ஐந்து நிமிடத்துள் செல்வநாயகத்தின் முயற்சியால் செல்வன் தேவதவஞானம் ஒரு கோல் அடித்தார். அதைத் தொடர்ந்து ஆட்டம் பெரும் விறுவிறுப்பெய்தியது. இடைவேளைவரை எவரும் கோல் அடிக்கவில்லை. பரமேஸ்வராக் கல்லூரியினரின் முயற்சிகளை எல்லாம் நெல்லியடி மகா வித்தியாலய கோல் பாதுகாவலர் வரதராசாவீணடித்து எல்லாப் பந்துகளையும் பிடித்துக் கொண்டார்.

இடைவேளையின் பின்னரும் ஆட்டம் சுறுசுறுப்பாக நடைபெற்றது. முதலில் பரமேஸ்வராக் கல்லூரி காப்டன் மகேந்திரன் ஒரு கோல் போட்டார். பின்னர் பரமேஸ்வராக் கல்லூரி வலதுபுற விளையாட்டுவீரர் நடராசா ஒன்றன்பின் ஒன்றாக நான்கு கோல்கள் போட்டார். இந்நிலையில் ஆட்டம் முடிவடைந்தது. மத்தியஸ்தராக திரு. ஆர். மகேந்திரன் கடமையாற்றினார்.

### விவசாயிகள் கஷ்டம்

கிளிநொச்சி. சனி

கிளிநொச்சிப் பகுதியில் தொடர்ந்து பெய்யும் மழையினால் அநேக விவசாயிகளின் வேளாண்மை சேதத்திற்கு உள்ளாகி விட்டன. சில விவசாயிகள் அறுவடை செய்யாததால் பயிர்கள் மழையினால் அழிந்த வண்ணமும், விவசாயிகள் வெட்டிய வேளாண்மையை சூடு அடிக்க முடியாமலும் இருக்கின்றது. சிறு குளங்களும், ஏரிகளும் நீர் நிறைந்து வழிகின்றன பூநகரிப் பகுதியில் தொடர்ந்து பெய்யும் மழையினால் அனேக வயல்கள் நீரில் மூழ்கி விவசாயிகளுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளன. தொடர்ந்து தினமும் பெய்யும் மழையினால் அக்கராயன், வட்டக்கச்சி, பூநகரி போன்ற இடங்களுக்கு பஸ் சேவையும் ஒழுங்காய் நடைபெறுவதில்லை.

### இரண்டுமாதம் சிறைத் தண்டனை

சாவகச்சேரி, ஞாயிறு

சாவகச்சேரி வாடிவீட்டுக் காப்பாளர் வி. சுப்பிரமணியம் என்பவரை இவ்வருடம் செப்டம்பர் மாதம் 20-ம் திகதி சாவகச்சேரி பஸ் நிலையத்தடியில் வைத்து கந்தையாசோமு என்பவர் கூரிய கத்தியால் வெட்டிக் காயப்படுத்தியதாகச் சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றம்சாட்டப்பட்டு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. ரூபட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட வழக்கில் மாஜிஸ்திரேட் திரு. ரூபட் சில்வா எதிரியைக் குற்றவாளியாகக்கண்டு இரண்டு மாதச் சிறைத்தண்டனை விதித்துத்தீர்ப்பளித்தார்.

வழக்காளி தரப்பில் புறக்டர் ... செல்லத்தம்பி, சாவகச்சேரிப்பொலிசாரின் உதவியுடன் வழக்கை நடத்தினார்.

எதிரியாகிய கந்தையா சோமு பார்வையாளர்களும், மாஜிஸ்திரேட்டுமே! ஆச்சரியப்படும் வகையில் தமக்காகத்தாமே வாதாடினார்.


வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத திருப்பணி நிதி



நன்கொடையை வழங்கினீர்களா வண்ணை வைத்தீஸ்வரன் பஞ்சரதத் திருப்பணிக்கு?
இன்றேல் இன்றே நன்கொடை வழங்கி ஊக்குவித்தல் அடியார் கடமையாகும்.

தனாதிகாரி,
தேர்த் திருப்பணிச்சபை,
தேவஸ்தான காரியாலயம்,
வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,
வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூ.மொ வி.ஸ்தாபனம்

# போதிய துணிகளை இன்னமும் இறக்குமதி செய்யவில்லை?

யாழ்ப்பாணம், ஞாயிறு
கூ. மொ. வி. ஸ்தாபனம் தற்பொழுது கையிருப்பில் உள்ள துணிகளை விற்கும் நோக்கத்துடன் மேலதிகமான துணிகளைக் கொள்வனவு செய்யவில்லையெனத் தெரிகிறது இதன் காரணமாகச் சென்றவாரம் கொழும்புக்குத் துணிகள் வாங்கச் சென்ற கூட்டுறவுச் சங்கங்களும், சமாசங்களும் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

தற்பொழுது துணிவகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவி வருவதால் பொதுமக்கள் துணிகளை இலகுவில் பெற முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. துணிகளை இறக்குமதிசெய்வதற்கு ஏகபோக உரிமைகொண்ட கூ மொ. வி. ஸ்தாபனம் துணிகளை இறக்குமதி செய்யாததால் பொதுமக்கள் தங்களுக்கு இஷ்டமான துணிகளை வாங்கமுடியாது துன்பப்படுகின்றனர்.

---

அச்சுவேலி, ஞாயிறு
அச்சுவேலி பஸ் நிலையத் திற்கருகாமையில் உள்ள பிரதான வீதி தற்போது மழைநீரும் சேறும் நிறைந்த கிடங்குகளுடன் காணப்படுகிறது.

வழிப்போக்கர்கள்குறித்த இடத்தில் செல்லும்போது வாகனங்களால் வீசப்படும் சேற்றுநீர் அவர்களை நனைத்துவிடுகிறது. இதற்கருகாமையில் உள்ள வெள்ள வாய்க்கால் சீரான முறையில் இல்லாததால் மழைநீர் தேங்கிநின்று நுளம்புகள் பெருகிஉள்ளன.

# சாட்சியம் முரண்பாடு: எதிரிகள் விடுதலை

மாவிட்டபுரம், ஞாயிறு
சாட்சியம் முரண்பாடாக இருந்ததனால்வழக்கொன்றில் இரு எதிரிகளும் விடுதலை செய்யப்பட்டனர்.

குப்பிளானைச் சேர்ந்த பொன்னம்பலம் நடனசிகாமணி, இராசையா நடராசா ஆகிய இருவரும் அதே ஊரைச்சேர்ந்த வைத்திலிங்கம் சிவஞானத்தை அடித்து கடும் காயம் விளைவித்ததாக நல்லதம்பி தம்பிஐயாவுக்கு இரும்புக்கம்பியால் அடித்து சிறுகாயம் விளைவித்ததாக சுன்னாகம் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ் நித்தியானந்தா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

திரு. கே. வி. எஸ் சண்முகநாதன் திரு. எம். வைரவநாதனின் உதவியுடன் சப் இன்ஸ்பெக்டர் திரு. இராசையாவின் அனுசரணையுடனும் வழக்கை நடத்தினர். 1-ம் எதிரி சார்பில் திரு. ஆர். ஜே. செல்வரத்தினமும் 2-ம் எதிரிக்காக திரு. சிவ ஸ்ரீ தரனும் ஆஜரானார்கள்.

சிவஞானம் தம்பிஐயா ஆகியோர் சாட்சியம் அளித்தபின் நீதிபதிபொலிஸ்தரப்பு வழக்கறிஞரிடம் சாட்சிகள் முரண்பாடாகஇருப்பதனால் வழக்கைதொடர்ந்துநடத்த விரும்புகிறீரா எனக்கேட்டபோது அவர் தங்கள் விருப்பப்படி செய்யுங்கள் என்று தெரிவித்தார்.

நீதிபதி சாட்சியம் முரண்பாடாக இருப்பதாக இருப்பதனால் வழக்கைத் தொடர்ந்து நடத்துவதில் அர்த்தமில்லை என்றுகூறி எதிரிகளை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

## யாழ்ப்பாண இந்துக்கல்லூரி பிரவேசம்: 1967

(1) ஆரம்ப G. G. E. (O/L) விஞ்ஞான வகுப்புக்கள். 1-1-53 க்குப்பின் பிறந்தவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்.

ஆரம்ப G. C. E. (A/L) கலை/விஞ்ஞான வகுப்புக்கள். 1-1-49 க்குப்பின் பிறந்தவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்.

(2) 6 ஆம் வகுப்பு: 1-1-55 க்குப் பின் பிறந்தவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்.

(3) ஏனையவகுப்புக்களில் சேர்வதற்கு இடமில்லை,

(4) விண்ணப்ப முடிவு திகதி 20-10-66.

(5) O/L ஆரம்பவகுப்புக்களுக்கும் A/L ஆரம்ப வகுப்புக்களுக்கும் உரிய விண்ணப்பப் பத்திரங்களைக் கல்லூரிக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். 6 ஆம் வகுப்புக்குரிய விண்ணப்பப்பத்திரம் அரசாங்க மாதிரிப் படிவத்திலமைய வேண்டும். கல்லூரிக் காரியாலயத்தில் பெறமுடியாது.

(6) 6 ஆம் வகுப்புக்குரிய பிரவேசபரீட்சைத்திகதி வித்தியாபகுதியினரால் செய்திப்பத்திரிகை வாயிலாக வெளியிடப்படும். ஏனைய வகுப்புக்களுக்குரியபிரவேச பரீட்சைத் திகதி விண்ணப்பதாரர்க்கு எம்மால் நேரிலறிவிக்கப்படும்.

5-10-66 அதிபர்.

1320

## 20 பேர் தெரிவு

சுழிபுரம், ஞாயிறு
சுழிபுரம் தேசவு நிலையத்துக்குபயிற்சியாளர்கள்தெரிவதற்கான நேர்முகம் பரீட்சை நேற்று பிற்பகல் சுழிபுரம் கிராமசபை மண்டபத்தில் நடைபெற்றது. வலி மேற்கு காரியாதிகாரி திரு, மாணிக்கம் நடராசா தலைமையில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றன. சுமார் ஐம்பதுக்குமேற்பட்டபெண்கள் பரீட்சைக்கு வந்திருந்தனர். முதல்பயிற்சிக்கு இருபது பிள்ளைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்,

---

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

அச்சுவேலி, ஞாயிறு
அச்சுவேலி புனித சென் திரேசா பாடசாலையின் பழைய மாணவர் சங்கக் கூட்டம் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டம் தலைமையாசிரியர் சங்கைக்குரிய மதர் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக வண-பிதா வெண்டக்கோன் கலந்து கொண்டார். நடப்பு வருட உத்தியோகத்தராகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர். செல்வி சி. யேசவ் உபதலைவர்- செல்வி ஆர். இராசநாயகம்.

காரியதரிசி-செல் விஆர், கொன்ஸ்டன்ரையின்,

## 14-ம் திகதி தண்டனை

மாவிட்டபுரம், சனி
காங்கேசன்துறை புகைபிரத நிலையத்தைச் சேர்ந்த எம். டி. பெர்னாண்டோ என்பவருக்கு அதேயிடத்தைச்சேர்ந்த வி. ஜி. சமரதாசா என்பவர் கத்தியால் வெட்டிக்காயம் ஏற்படுத்தியதாக காங்கேசன்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் தீர்ப்புவழங்குவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதிபதி எதிரியைகுற்றவாளியாகக் கண்டார்.

நீதிபதி எதிரியின் கைவிரல் அடையாளங்களைஎடுக்க உத்தரவிட்டு தண்டனை வழங்குவதற்காக வழக்கை இம்மாதம் 14-ம் திகதி வரை ஒத்திவைத்தார்.

காங்கேசன்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. இராமநாதனின் உதவியுடன் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் வழக்கைநடத்தினர். எதிரிதரப்பில் வழக்கறிஞர் திரு. ஏ. குமரகுருவின் அனுசரணையுடன் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜரானார்.

---

## பாம்பு தீண்டியது

அச்சுவேலி, ஞாயிறு
பொன்மணி என்னும் பெண்மணிக்கு பண்டத்தரிப்பில் வைத்துப் புடையன் பாம்பொன்று தீண்டிவிட்டது. அச்சுவேலி பிரபல விஷகடி வைத்தியர் திரு. கொன்ஸ்டன்டைனின் சிகிச்சையால் இவர் மயக்கம் தெளிந்து குணமடைந்துள்ளார்.

---

## தடுப்பு மருந்து

இமையாணன், ஞாயிறு
உடுப்பிட்டி சந்தியிலிருக்கும் அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலும், மகளிர் கல்லூரியிலும் நெருப்புக் காய்ச்சல் தடுப்பு மருந்து ஊசிமூலம் போடப்பட்டது. கல்லூரிகளின் ஆசிரிய ஆசிரியைகளுக்கும், மாணவ மாணவிகளுக்கும் இந்த ஊசி மருந்து போடப்பட்டது.

---

## இலவச விதைநெல் கிடையாது

சோண்டாவில், ஞாயிறு
வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவிவசாயிகளுக்குவிதை நெல் இலவசமாக வழங்கப் படமாட்டாது.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இலவசமாக விதை நெல் வழங்குமாறு அரசாங்க அதிபரை கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம்கேட்டிருந்தார். விதை நெல் வழங்கப்பட மாட்டாது என்றும் ஆனால்பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு குறைந்த விலையில் விதை நெல் வழங்கப்படும்என்றும் சங்கங்கள் மூலம்கடனுதவி வழியாகவும் விதை நெல் பெற்று கொள்ளலாமென்றும் அரசாங்கஅதிபர் கிளிநொச்சி எம் பிக்கு தெரிவித்துள்ளார்.

---

## ஏர் உழுங் காட்சி

சாவகச்சேரி, ஞாயிறு
'மறவன்புலம்' என்னும் பகுதியில் உள்ள வயல்களில் ஒரு அடி ஆழத்தண்ணீரில் நின்று விவசாயிகள் ஏர் உழுகின்றார்கள். இக்காட்சி பார்க்கப்பரிதாபமாக இருக்கின்றது.

கடந்த பல நாட்களாகத் தொடர்ந்து பெய்துவரும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இப்பகுதியில் உள்ள வயல்கள் [illegible] இருக்கின்றன.

# பதிவு செய்யாத மீன்பிடி வள்ளங்கள்

## கண்டு பிடிக்க அரசாங்கம் நடவடிக்கை

மாவிட்டபுரம், ஞாயிறு
பதிவு செய்யாமல் மீன்பிடி வள்ளங்களையும் கட்டுமரங்களையும் வைத்திருப்பவர்களைக் கண்டுபிடிக்க அரசாங்கம் புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறது.

கட்டுமரங்கள், இயந்திரக் கட்டுமரங்கள், வள்ளங்கள், இயந்திர வள்ளங்கள் என்பன பெருமளவு பதிவு செய்யப்படாது உபயோகிக்கப்பட்டு வருவதாக மீன்பிடி இலாகாவுக்கு தகவல் கிடைத்துள்ளது. அரசாங்கத்துக்கு கிடைக்கவேண்டிய வருமானம் சரிவரக் கிடைக்கவில்லை என்பதனை ஆராய்ந்தபோது தான் ஏராளமான மீன்பிடிவள்ளங்களும் கட்டுமரங்களும் பதிவுசெய்யப்படாது இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

மீன்பிடி இலாகா ஆலோசகர்கள் அரசாங்கத்திடம் புதிய திட்டம் ஒன்றினைச் சமர்ப்பித்துள்ளதாகத்தெரிகிறது

புதிய திட்டத்தின்படி வள்ளங்கள், கட்டுமரங்கள் எல்லாவற்றையும் விரைவில் பதிவுசெய்து கணக்கெடுப்பது என்றும் பதிவு செய்யப்படாது வைத்திருப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. வள்ளங்களை பதிவுசெய்யும் விஷயத்தில் பொலிசாரின் உதவியை நாடுவது என்று மீன்பிடி இலாகா இன்ஸ்பெக்டர்கள் தீர்மானித்திருப்பதாகவும் நம்பப்படுகிறது.

வள்ளங்கள், கட்டுமரங்களைப் பதிவுசெய்வதன் மூலம் கள்ளக்கடத்தலையும் பெருமளவு கண்டுபிடிக்க முடியும் என கருதப்படுவதாகவும் தெரிகிறது.

கள்ளக்கடத்தல் முயற்சியில் பதிவுசெய்யப்படாத கட்டுமரங்களும், வள்ளங்களும் பெருமளவு உபயோகப்படுவதாகப்பொலிசார் சந்தேகிக்கின்றனர். பதிவுசெய்யாத வள்ளங்கள், கட்டுமரங்கள் வைத்து கடத்தல் செய்பவர்கள் சமயோசிதமாகத்தப்ப இது உதவுவதாக இருக்கும் என்றும் கருதப்படுகிறது.

இதற்கிடையில் வடபகுதியில்கள்ளக்கடத்தலைக்கண்டுபிடிக்க விரைவில் பல புதிய படகுகள் இங்கு வரவிருக்கின்றன.

# ஒன்பது பிள்ளைகளின் தந்தை நீரில் மூழ்கி மாண்டார்!

திருநெல்வேலி, ஞாயிறு
அரியாலையைச் சேர்ந்த செல்லையா கந்தையா என்பவர் நேற்றைய தினம் நாயன்மார்கட்டு தாமரைக் குளத்துக்குள் குளிக்கும் போது நீரில் மூழ்கி மூச்சுத் திணறி இறந்தார். இவரது மரணம் சம்பந்தமாக திரு. எஸ். கனகரத்தினம் விசாரணை நடத்தினர்.

சின்னத்தம்பி கனகரத்தினம் விசாரணை நடத்தி
சின்னத்தம்பி கனகரத்தினம் என்பவர் சாட்சியமளிக்கையில் "நேற்று மாலை 4-30 மணியளவில் நான் நாயன்மார்க்கட்டிலிருந்து கனகரத்தினம் வீதிவழியாகச்சென்றுகொண்டிருந்தேன். தற்செயலாக நான் அருகிலுள்ள குளத்தைப் பார்தபோது அங்கு ஒருவர் தண்ணீருக்குள் நின்று தத்தளித்தபடி கைகளை மேலே நீட்டியவண்ணம் கஷ்டப்படுவது தெரிந்தது எனக்கு நீந்தத் தெரியாது. உடனே நான் அருகிலுள்ள கந்தப்பொடி என்பவரிடம் ஓடிச் சென்று விஷயத்தைச் சொல்லி அவரைக் கூட்டிக் கொண்டுவந்தேன் அவர் குளத்துள் இறங்கி ஆளை வெளியே கொண்டு வந்தார். அப்போது காலஞ்சென்றவர் அறிவிழந்த நிலையில் இருந்தார். அப்போது அவ்வழியே காலஞ்சென்றவரின் மகனும் பரராஜசிங்கம் வந்தார், அவரிடம் விஷயத்தை நான் தெரிவித்தேன். அவர்வீட்டுக்குச்சென்றுதன் சகோதரரை அழைத்துவந்து காரில் காலஞ் சென்றவரை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றபோது அங்கு அவர் இறந்து விட்டதாகடாக்டர்தெரிவித்தார்.

காலஞ்சென்றவரின் மகனை கந்தையா பாலசிங்கம் கதிர்காமர் கந்தப்பொடி, கந்தையா சுப்பிரமணியம், டாக்டர் என். சுப்பிரமணியம் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

பிரேதபரிசோதனைசெய்த டாக்டர் காலஞ் சென்றவரின் வயிற்றில் கள் இருந்ததென்றும் மூச்சுத்திணறியே இறந்திருக்க வேண்டுமெனவும் தெரிவித்தார் மரண விசாரணை அதிகாரிதிரு. எஸ். கனகரத்தினம் விபத்தினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

---

## இறந்து கிடந்தார்

திருநெல்வேலி, ஞாயிறு
பண்டாரக்குளத்தில் அப்பாப்பிள்ளை திருநாவுக்கரசு என்பவர் நீரில்மூழ்கிஇறந்து போனதாக அவரது மகன் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸார் சடலத்தை தேடிவருகின்றனர்.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கப் பெற்ற தகவலின்படி பொலிஸார் கடந்த ஆறுமணி நேரமாககுளத்தில்தேடுதல்நடத்தியும் சடலம் கிடைக்கவில்லை என்று தெரியவருகிறது.

## 'பட்டினி இருப்பதே ஒரே வழி!

திருநெல்வேலி, ஞாயிறு
"ஓய்வு பெற்று பல வருடங்களாகியும் எங்களுக்கு இன்னமும் பென்ஷன் பணமோ, சகாய நிதியோ வழங்கவில்லை. ஒரு மாத காலத்துக்குள் எமது குறைகளைத் தீர்க்கத் தவறினால் உங்கள் காரியாலயங்களின் முன்னால்வந்திருந்துபட்டினி கிடக்க வேண்டி ஏற்படும்"

மேற்கண்டவாறு அரசினர் கிருஷிகப் பகுதி ஓய்வு பெற்ற ஊழியர் சங்கத்தின் செயலாளர் திரு. வை. சுப்பிரமணியம் யாழ்ப்பாணம் விவசாய நிர்வாக அதிபருக்கு அனுப்பியுள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளார்,

தாங்கள் ஓய்வு பெற்று பல வருடகாலமாகியும் தங்களுக்கு பென்ஷன் பணமும், சகாய நிதியும் வழங்கவில்லை என குற்றம் சாட்டி, வவனியா, திருநெல்வேலி, பரந்தன், கிளிநொச்சி ஆகிய இடங்களில் உள்ள அரசாங்க கிருஷிகப் பண்ணைகளிற் கடமையாற்றி ஓய்வு பெற்ற ஊழியர்கள் சங்கம் அனுப்பியுள்ள மேற்படி மகஜரின் பிரதி வட இலங்கை அரசாங்க கிருஷிகப் பண்ணைத் தொழிலாளர் சங்கத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org